இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2022. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 146 | இதழ் : 09 | திகதி : 22.05.2022 | விலை : 30.00

# கூட்டொருங்கியக்க வாழ்வு என்பது சாட்சிய வாழ்வே

## கூட்டொருங்கியக்க மாநாட்டில் யாழ். ஆயர்





வருகிற 2023 ஆம் ஆண்டு உரோமாபுரியில் நடைபெற இருக்கின்ற உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான தயாரிப்புப் பணிகளில் முக்கிய நிகழ்வாக யாழ்ப்பாண மறைமாவட்ட கூட்டொருங்கியக்க மாநாடு கடந்த 14.05.2022 யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ் ஆயர் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் யாழ்ப்பாண மறைமாவட்டக் குருக்கள் மற்றும் துறவற சபைகளின் பிரதிநிதிகள், பொதுநிலைப் பிரதிநிதிகள் என 225 பேர் வரையில் கலந்து சிறப்பித்தார்கள்.

இம்மாநாட்டின் தலைமை உரையின் போது ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அனைவர் மத்தியிலும் எமது கிறித்தவ விழுமியங்களை வெளிப்படுத்தி சான்று பகர்ந்து வாழ்வதே கூட்டொருங்கியக்க வாழ்வு என்று தெரிவித்தார்.

எமது யாழ்ப்பாணம் மறைமாவட்டம் கூட்டொருங்கியக்கத் திரு அவையாக எவ்வாறு பயணிக்கிறது என்பதைக் கண்டறியும் பொருட்டு வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட கருத்துக் கணிப்புகளின் தொகுப்புகள் இந்த மாநாட்டில் முன்வைக்கப்பட்டன. பத்துக் கருப்பொருட்களின் கீழ் பத்துக் குருக்களினால் தொகுப்புக்கள் வழங்கப்பட்ட பின்னர் குருக்கள் துறவிகள் பொதுநிலையினர் தங்கள் கருத்துக்களை முன்வைத்தார்கள்.

நமது யாழ் மறைமாவட்டத்தின் விசுவாச வாழ்வில் உள்ள குறைகள் நிறைகள் அனைத்தும் இம்மாநாட்டில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டன. இக் கருத்துக்களனைத்தும் மறைக் கோட்ட, பங்கு மற்றும் ஆலய மட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு எல்லா மக்களுக்கும் இது பற்றிய தெளிவு கொடுக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் பெறப்பட்ட தகவல்களின் மொத்தத் தொகுப்பு இலங்கை ஆயர் பேரவைக்கு அனுப்பி வைக்கப்படும்.

யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்பணி ப. யோ. ஜெபரட்ணம் அடிகளார் இம்மாநாட்டை நெறிப்படுத்தினார்.

## இடைக்கால அரசாங்கம் தேவை, அடிப்படைத் தேவைகள் வழங்கப்பட வேண்டும், வன்முறை தீர்வல்ல, நாட்டில் அமைதி திரும்பவேண்டும்

### இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் அறிக்கை

இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையாகிய நாம் (CBCSL) முதலில் அமைதியான போராட்டக்காரர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட அரச அனுசரணை வன்முறையை வன்மையாகக் கண்டிக்கிறோம். கட்சி ஆதரவாளர்களை ஏற்றிச் சென்று தூண்டிவிட்டு, அச்சுறுத்தி கொடூரமான வன்முறைச் செயல்களுக்குப் பின்புலகாரணர்களாக இருந்தோர் நாட்டுமக்கள் முன் குற்றவாளிகளாகவேயுள்ளனர். நிர்வாகத்துறையினரும், நீதித்துறையும் இச் செயல்களுக்குக் காரணமானவர்களின் முன்னைய அல்லது தற்போதைய அந்தஸ்து நிலைகளைப் பொருட்படுத்தாமல் விசாரித்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு நாம் கேட்டுக்கொள்கிறோம். ☞ 11

## இலங்கையில் வன்முறைகளை உடன் நிறுத்துங்கள்



திருத்தந்தை பிரான்சிஸ்

இலங்கைவாழ் மக்களின் உண்மையான ஏக்கங்கள் செவிமடுக்கப்படவும், மனித உரிமைகள் மற்றும், பொது மக்களின் சுதந்திரங்கள் முழுமையாக மதிக்கப்படுவதற்கு உறுதியளிக்கப்படவும் அதற்குப் பொறுப்பான தலைவர்களுக்கு திருத்தந்தை விண்ணப்பம் ஒன்றை விடுத்துள்ளார்.

சமுதாய, மற்றும், பொருளாதாரச் சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்கொள்ளும் இலங்கைவாழ் மக்கள், தங்களின் கோரிக்கைகள் கேட்கப்படுவதற்கு அமைதியான முறையில் செயல்படுமாறு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேட்டுக்கொண்டார். ☞ 02

## முதல் தமிழ் புனிதர் தேவசகாயம்பிள்ளை



தமிழ்நாட்டின் கன்னியாகுமரி மாவட்டம் நட்டாலம் கிராமத்தை சேர்ந்த மறைசாட்சி தேவசகாயம் பிள்ளை கடந்த 15.05.2022 அன்று வத்திக்கான் நகரில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். கன்னியாகுமரி மாவட்டம் நட்டாலத்தை சேர்ந்தவர் வாசுதேவன் நம்பூதி மற்றும் தேவகியம்மாள் தம்பதிக்கு 1712 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி பிறந்தவர் தான் நீலகண்டன்பிள்ளை . ☞ 02

## இலக்கைநோக்கிப் பயணிப்போம் நூல் வெளியீடு



அருட்திரு இராசநாயகம் ஜினோல்ரன் விஜின்ரஸ் அவர்கள் எழுதிய "இலக்கை நோக்கிப் பயணிப்போம்" என்னும் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நூல் வெளியீடு 05.05.2022 அன்று கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் நடைபெற்றது.

திரு இருதயக் கல்லூரி அதிபர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மறைமாவட்ட ஆயர் பேருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையும், சிறப்பு விருந்தினராக யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ப.யோ.ஜெபரட்ணம் அடிகளும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நூலுக்கான மதிப்பீட்டு உரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியற் துறைத் தலைவர் திருமதி ஜெயலச்சுமி இராசநாயகம் அவர்கள் வழங்கினார்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## மக்கள் சிந்திக்க வேண்டிய காலமிது

ஈழத்தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக் கோரிக்கைகள் சர்வதேச மட்டத்தில் அதிகளவு பேசப்பட்டு முக்கியத்துவம் பெறுகின்ற ஒவ்வொரு காலகட்டத்திலும், சிங்கள பௌத்த தேசம் ஏதோவொரு வகையில் தன்னை மீளக் கட்டமைக்கின்றது.

பௌத்த தேசிய அரசியல் தலைவர்களிடையே வேறுபாடுகள் இருந்தாலும், இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பைப் பாதுகாக்கும் விடயத்தில் உடன்பாடாகிவிடுகின்றனர் என்பதற்கு ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியேற்றமை மாத்திரம் உதாரணமல்ல. 2002 ஆம் ஆண்டு நோர்வேயின் ஏற்பாட்டில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமான காலத்தில் இருந்து அந்த உதாரணங்களைக் காணலாம்.

இலங்கைத்தீவில் காலத்துக்குக் காலம் எழுகின்ற அரசியல் - பொருளாதார நெருக்கடிகள், விலைவாசி உயர்வுகளுக்கு எழுபது ஆண்டுகால இனப்பிரச்சினையே மூல காரணம்.

ஆனால் இந்த மூல காரணம் ஏற்க மறுக்கப்பட்டு, இலங்கை மக்களின் ஜனநாயகப் பிரச்சினை, மனித உரிமைப் பாதுகாப்பு விவகாரங்களாகச் சுருக்கப்பட்டுப் பின்னர் பௌத்த தேசிய வாதத்தை மையப்படுத்திய இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்புப் பாதுகாக்கப்பட்டு விடுகின்றமை வரலாறு.

காலிமுகத் திடல் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று வாரங்களில் கண்டியை மையப்படுத்திய மூன்று மகாநாயக்க தேரர்கள் கோட்டாபய ராஜபக்சவுக்கும், மகிந்த ராஜபக்சவுக்கும் மற்றும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் அனுப்பிய கடிதத்தில்கூட ஜனாதிபதி பதவி விலக வேண்டுமெனக் கோரப்படவில்லை.

மாறாகப் பொருளாதார நெருக்கடிக்கு இணைந்து தீர்வைக் காணுங்கள் என்றே கடிதத்தில் கூறப்பட்டிருந்தது. ஆகவே அதனடிப்படையிலேயே, புதிய பிரதமரும் பதவியேற்றிருக்கிறார்.

மகாநாயக்க தேரர்களின் கடிதத்தின் அடிப்படையிலேயே இடைக்கால அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்கான பரிந்துரை ஒன்றை இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கமும் தயாரித்திருந்தது.

அந்தப் பரிந்துரையில் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் எதுவுமே முன் மொழியப்படவில்லை. மாறாக ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்குரிய பரிந்துரைகள் மாத்திரமே விதந்துரைக்கப்பட்டுள்ளன.

ஆகவே 1958 இல் கொழும்பில் ஈழத்தமிழின அழிப்பு ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல், 2009 இறுதிப் போரும், அந்தப் போரின் பின்னரான பதின்மூன்று வருட கால அரசியல் சூழலிலும், சிங்கள பௌத்த தேசியவாதிகளுக்குள் அவ்வப்போது ஏற்படுகின்ற மோதல்கள், தமக்கெதிரான சிங்கள மக்களின் எழுச்சிப் போராட்டங்களுக்குள் சிக்குப்பட்டாலும், மகாநாயக்க தேரர்கள் அனுப்பும் ஒரு கடிதத்தோடு முரண்பாட்டில் உடன்பாடாக இணக்க அரசியலுக்குள் வந்துவிடுவர்.

அந்த முரண்பாட்டில் ஓர் உடன்பாட்டு அரசியல்தான் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றமை. அத்துடன் அமெரிக்க - இந்திய மற்றும் சீனப் புவிசார் அரசியல் போட்டிகளும் பௌத்த தேசிய வாத அரசியல் சிந்தனைகளின் போக்குக்கு ஏற்பவே, ஆதரவை வழங்கித் தமக்குரிய தேவைகளையும் பெற்றுக் கொள்ளுகின்றன.

கோட்டாவுக்கு எதிரான போராட்டங்கள் கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, ஜனநாயகப் போராட்டங்களை அடக்க முற்படக்கூடாது என்றே அமெரிக்கத் தூதரகம் அறிக்கை வெளியிட்டது. கண்டனமும் வெளியிட்டது.

இந்தப் போக்கிலேயே தமிழ் தன்னார்வ நிறுவனங்களை நடத்திக் கொண்டிருக்கும் சில தமிழர்களும், வடக்குக் கிழக்கில் உள்ள புவிசார் சமூகங்களுக்குப் போதனைகளை வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்றொரு வார்த்தை தூதரக அறிக்கைகளில் இல்லை. ஏனெனில் சிங்கள ஆட்சியாளர்கள், தமது உள்ளக மோதல்களை எப்படியாவது முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமெனத் தூதரகங்கள் காத்திருக்குமே தவிர, தமது புவிசார் அரசியல் - பொருளாதாரத் தேவைகளை எப்படியும் எந்தவொரு சிங்களத் தலைவரிடமும் பெற்றுவிடலாமென அமெரிக்கா போன்ற வல்லரசுகள் இலகுவாக நம்புகின்றன.

அவர்களைப் பொறுத்தவரை இலங்கைத்தீவை சிங்கள இராமன் ஆண்டாலென்ன, சிங்கள இராவணன் ஆண்டாலென்ன எல்லாமே ஒன்றுதான்.

மக்களின் எண்ண ஓட்டங்களை மையமாக் கொண்டு அதனைத் தனக்குச் சாதகமாக்கி வெற்றி பெறுகின்ற சிங்கள ஆட்சியாளர் ஒருவர், தான் வெற்றிபெற்ற பின்னர், மக்களின் கோபத்துக்கு உள்ளாகித் தோல்வி கண்ட ஆட்சியாளரை விசாரணை என்ற போர்வையில் காப்பாற்றி விடுகின்றார்.

இதுதான் இன்று இலங்கைத்தீவின் அரசியலில் நடக்கின்றது. ஆகவே மக்கள்தான் நல்ல வாக்காளர்களாக மாற வேண்டும். தேர்தல் காலங்களில் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

**அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்**

# துயர் பகிர்கின்றோம்

யாழ் மறைமாவட்டக் குருவும், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளருமாகிய அருட்பணி தேவரட்ணம் செல்வரட்ணம் அடிகளாரின் அன்புத் தந்தை **திரு மரியாம்பிள்ளை தேவரட்ணம்** அவர்கள் கடந்த 11.05.2022 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும், மற்றும் பிள்ளைகள், உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

### இலங்கையில் வன்முறைகளை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

11ஆம் திகதி புதன்கிழமை காலையில், வத்திக்கானின் தூய பேதுருவளாகத்தில் நடைபெற்ற மறைக்கல்வியுரைக்குப்பின், இலங்கையில் போராடிவரும் பொதுமக்களை, குறிப்பாக இளையோரை நினைவுகூர்ந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அந்நாட்டின் அரசியல் தலைவர்கள், இம்மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்திக் கூறினார்.

இலங்கையில் வன்முறைக்கு இடமளிக்காத, அமைதியான மனநிலை பேணிக் காக்கப்படவேண்டும் என்றுவிண்ணப்பிக்கும் அனைத்துமதத் தலைவர்களோடுதானும் இணைவதாகத் தெரிவித்துள்ள திருத்தந்தை, நாட்டுமக்களின் உண்மையான ஏக்கங்கள் செவிமடுக்கப்படவும்,மனிதஉரிமைகள் மற்றும்,பொதுமக்களின் சுதந்திரங்கள் முழுமையாக மதிக்கப்படுவதற்கு உறுதியளிக்கப்படவும் வேண்டும் என,அதற்குப் பொறுப்பான தலைவர்களுக்கு அழைப்பு விடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நீண்டகாலமாக அமைதியான முறையில் இடம்பெற்று வந்த மக்கள் போராட்டங்கள், இவ்வாரத்தில் வன்முறையாக மாறி, எட்டுப் பேர் உயிரிழப்பதற்கும், 219 பேர் காயமடைவதற்கும், பிரதமர் மகிந்த இராஜபக்ஷே அவர்கள் பதவி விலகவும் காரணமாகியுள்ளன.

# முதல் தமிழ் புனிதர் தேவசகாயம்பிள்ளை

(1ம் பக்கத்தொடர்ச்சி)

நீலகண்டன் பிள்ளை சிறுவயது முதலே படிப்பில் கெட்டிக்காரர். பல்வேறு கலைகளைக் கற்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். இதனால் பல்வேறு கலைகளிலும், மொழிகளிலும் அவர் சிறந்து விளங்கினார்.

குறிப்பாக தமிழ், மலையாளம், வடமொழி ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்தார். மேலும் வர்மசாஸ்திரம், சிலம்படி, மல்யுத்தம், குதிரையேற்றம், அம்பு எய்தல், அடிமுறைகள், சண்டைப்பயிற்சி போன்ற பல கலைகளிலும் கைதேர்ந்தார். அவர்கள் வசிக்கும் பகுதி திருவிதாங்கூர் சமஸ்தானத்துக்கு உட்பட்டது.

இதையடுத்து மன்னரிடம் போர் படை வீரராக அவர் பணியாற்றினார். இவரது திறமையைக் கண்டு மன்னர் வியந்தார்.

இதையடுத்து அரசன் அவரை அரசவை அதிகாரியாக நியமித்தார். நீலகண்டன் பத்மநாபபுரம் அரண் மனையைச் சுற்றிலும் கோட்டை கட்டுமான பணிகளை கண்காணித்தார்.

மேலும் அவர் அங்குள்ள நீலகண்டசாமி கோவில் அதிகாரியாகவும் இருந்தார். இந்நிலையில் பார்கவி என்ற பெண்ணை திருமணம் செய்து இல்லற வாழ்வில் ஈடுபட்டார். இதற்கிடையே குளச்சல் போர் ஏற்பட்டது. 1741 ஆம் ஆண்டு திருவிதாங்கூர் படைகளுக்கும், டச்சுப்படைகளுக்கும் இடையே நடைபெற்ற போரில் டச்சுப்படைத் தளபதி பெனடிக்ட் டிலனாய் திருவிதாங்கூர் மன்னரிடம் சரண் அடைந்து போர்க்கைதியானார். பிற்காலத்தில் மன்னர் அவரை தமது படைத்தளபதியாக நியமித்தார்.

கத்தோலிக்க கிறிஸ்தவரான டிலனாயுடன், நீலகண்டனுக்குப் பழக்கம் ஏற்பட்டது. அப்போது டிலனாய், இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும், கிறிஸ்தவர்களின் புனித நூலான திருவிவிலியத்தில் உள்ள யோபுவின் வரலாறையும் மேற்கோள் காட்டி ஆறுதல் கூறினார். இந்த விளக்கம் நீலகண்டனுக்குப் பிடித்துப்போனதோடு, அவருடைய மனதில் ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தியது. இதையடுத்து இயேசு பற்றி முழுமையாக அறிய அவர் விரும்பினார். இதையடுத்து திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவராக மதம் மாறினார். தற்போதைய திருநெல்வேலி மாவட்டத்தின் வடக்கன்குளத்தில் உள்ள திருக்குடும்ப ஆலயத்தில் தேவசகாயம் பிள்ளை என்னும் பெயரில் திருமுழுக்குப் பெற்றார்.

அவருடன் மனைவியும் மதம் மாறினார். அவருக்கு ஞானப்பூ என்று பெயர் சூட்டப்பட்டது. தேவசகாயம் திருமுழுக்குப் பெற்றபிறகு நற்செய்தியை அறிவிக்கத் தொடங்கினார். சில படைவீரர்களும் மனம் மாறிகிறிஸ்தவரானார்கள். இதையடுத்து மனிதர்கள் அனைவரும் பிறப்பால் சமம், சாதி, மதம் எனும் ஏற்றத்தாழ்வுகள் மனிதர்களுக்குக் கிடையாது எனப் போதனைகளை துவங்கினார்.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மக்களிடம் நெருக்கமாக பழகினார். பலரைக் கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றினார். இதற்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியது. கிறிஸ்தவ மதத்தைக் கைவிடுமாறு வலியுறுத்தப்பட்டது. இருப்பினும் அவர் செவி சாய்க்கவில்லை. மன்னர் கூறியும் அவர் மனம் மாறவில்லை. இதையடுத்து மன்னர் மார்த்தாண்ட வர்மா தேவசகாயத்தை சிறையில் அடைக்க உத்தரவிட்டான். சிறை தண்டனை மூலம் அவர் மனம் மாறுவார் என்ற எதிர்பார்ப்பும் பொய்யானது. அவர் நற்செய்தி அறிவிப்பைக் கைவிடவில்லை. இதனால் அவர் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார். அவரைக் கொல்ல முடிவு செய்தனர். இதையடுத்து மற்றவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் அவர் எருமைமாடு மீது அமர்த்தி ஊர்வலமாக அழைத்து செல்லப்பட்டார். இறுதியாக ஆரல்வாய்மொழி அருகே காற்றாடி மலையில் படைவீரர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது உடல் வனவிலங்குகளுக்கு இரையாக போடப்பட்டதாகக் கூறப்படுகிறது. உடலின் சில பாகங்கள் கோட்டார் புனித சவேரியார் பேராலயத்தின் பலிப்பீடத்துக்கு முன்பு அடக்கம் செய்யப்பட்டது.

இவரிடம்ஆசிபெறசென்றவர்களுக்கு நற் புதுமைகள் கிடைத்தன. இதன்மூலம் மறைசாட்சி தேவசகாயம் புனிதராக கருதப்பட்டு வந்தார். இவருக்குப் புனிதர் பட்டம் வழங்க வேண்டும் என்று தமிழக கத்தோலிக்க திருஅவை சார்பிலும், கோட்டார் மறை மாவட்டம் சார்பிலும், இறைமக்கள் சார்பிலும் கத்தோலிக்க திரு அவையின் தலைமையகமான வத்திக்கானில் உள்ள புனிதர் பட்டமளிப்பு பேராயத்துக்கு தொடர்ந்து கோரிக்கை வைக்கப்பட்டு வந்தது. இது நீண்ட காலமாகக் கிடப்பில் இருந்த நிலையில் 2012 இல் தேவசகாயம் அருளாளர் நிலைக்கு(முக்திப்பேறு பெற்ற நிலைக்கு) உயர்த்தப்பட்டார்.

கடந்த 2021 இல் மறைசாட்சி தேவசகாயத்துக்குப் புனிதர் பட்டம் வழங்குவதான அறிவிப்பு வெளியானது. அதன்படி வத்திக்கானில் உள்ள புனித பேதுருவானவர் சதுக்கத்தில் கடந்த வாரம் மறைசாட்சி தேவசகாயத்துக்குப் புனித பட்டத்தைத் திருத்தந்தை பிரான்சிஸ் வழங்கினார். இதன்மூலம் புனிதர் பட்டம் பெற்ற முதல் தமிழர் என்ற பெருமையை தேவசகாயம் பெற்றுள்ளார்.


### கத்தோலிக்க அச்சகத்தில் விற்பனைக்கு

- மோட்சபாதை
- செபப் புத்தகங்கள்
- மொழுகுவர்த்திகள்
- முதல்நன்மை சான்றிதழ்கள்
- திருச் செபமாலைகள்
- திருப்பலிப் பொருட்கள்
- திருப்பலி ஆடைகள்
- பரிசுப் பொருட்கள்

என்பவற்றை மலிவு விலையில் பொற்றுக்கொள்ளலாம்.

# ரஷ்ய தேசம் - சிங்கள தேசம்

## — ஓர் ஒப்பு நோக்கிய பார்வை

### முன்னுரையாக

உக்ரேன்- ரஷ்யப் போரை மையப்படுத்தியே இந்த ஒப்பு நோக்கிய பார்வை அமைந்துள்ளது. ஆகவே, இது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட ஒப்புநோக்கு. இதை முன்னுரையிலேயே கூறுவதற்குக் காரணம்: ரஷ்யாவையும் சிங்கள தேசத்தையும் நிலப்பரப்பாலோ, பொருளாதாரத்தாலோ, ஆயுத பலத்தாலோ, ஒரு நீண்ட கால கலாசார மதப் பின்னணியாலோ கிஞ்சித்தும் இந்த இரு நாடுகளையும் ஒப்பிட முடியாது. அது நியாயமும் அல்ல. இதில் தெளிவு அவசியம்.

### "பொய்யன்"

இவ்வாண்டு மாசித் திங்களின் தொடக்கத்திலேயே உக்ரேன் எல்லைகளில் ரஷ்யா ஒரு போருக்கு வேண்டிய போர்க் கருவிகளை, போர்க் கவச வாகனங்களை, ஏவுகணைகளை, ஆயுதம் தாங்கிய படையினரை குவிக்கத் தொடங்கியது. இதை உன்னிப்பாக அவதானித்த மேற்கு ஐரோப்பிய நாடுகளும் வட அமெரிக்காவும் ரஷ்யாவை எச்சரித்தன. "இது போருக்கல்ல, ஆனால் இது படைகளின் ஒரு பயிற்சி (A Military Exercise)" என்று புட்டின் மீண்டும் மீண்டும் கூறி வந்தான். ஆனால், நாளுக்கு நாள் படைகளின் எண்ணிக்கை அதிகரித்தன. போர் வாகனங்கள் குவிந்தன. மேற்கு நாடுகளும் தங்கள் பல்லவியையே மீண்டும் மீண்டும் பாடினார்கள். "புட்டினை நம்ப முடியாது, புட்டின் போருக்குத்தான் ஆயத்தம் செய்கின்றான்" என்று மேற்கு நாடுகள் சொல்லி வந்தன. "மேற்கு நாடுகளுக்கும் வட அமெரிக்காவிற்கும் ஒரு போர்ப் பீதி (War Phobia) பீடித்துள்ளது" என்று புட்டின் பதிலடி கொடுத்து வந்தான். இறுதியில், பலர் எதிர்பார்த்தது போலவே, புட்டீன் உக்ரைனை நோக்கிப் போர் தொடுத்தான். இந்தப் போர் இன்று வலுவடைந்து வருகின்றது. புட்டீன் " ஒரு பொய்யன்" என்று மேல்நாடுகள் கூறின.

உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்து நடத்தி வரும் போர் திட்டமிட்டு நடத்தப்படுகின்றது என்பது மேற்கு நாட்டு அரசியல் அவதானிகளின் கூற்று. அதில் உண்மை உண்டு என்பது இக்கட்டுரையாளனின் கருத்துமாகும்.

### யாருக்குப் போர்ப் பீதி?

புட்டின் இக்கால கட்டத்தில் இப்போரைத் தொடுக்கக் காரணமென்ன? NATO நாடுகளின் ஒன்றிணைப்பை புட்டின் விரும்பவில்லை. உக்ரைன், NATO நாடுகளுடன் இணைய விருப்பம் தெரிவித்திருந்தது. இதைப் புட்டின் முற்றாக வெறுத்தான். NATO நாடுகளின் பலம் ரஷ்யாவின் பாதுகாப்பிற்கு ஒரு சவால் என்று புட்டீன் கருதினான். NATO நாடுகள் ரஷ்யாவை ஆக்கிரமிக்கலாம் என்ற ஒரு பயப்பீதி (Fear Phobia) புட்டீனை ஆட்கொண்டது. இந்தப் பயப்பீதி புட்டீனால் கற்பனை செய்து உருவாக்கப்பட்டது. ரஷ்ய மக்களை ஏமாற்ற புட்டீனின் இந்தப் பயப்பீதி உதவியது.

KGB (ரஷ்யாவின் உளவுப் படை) யில் அங்கம் வகித்து, பதவிப் படிகளில் விரைவாக ஏறி இன்று ரஷ்யாவின் சர்வாதிகாரியான புட்டீனுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை உண்டு. தன்னை ஒரு பெருந் தலைவனாக மேற்கு நாடுகளும், வட அமெரிக்காவும் ஏற்றுக் கொள்ளவில்லை என்ற ஓர் ஆதங்கமும் அவனுக்கு உண்டு.

ரஷ்யாவில் இருந்து பிரிந்து ஒரு தனி நாடாக உக்ரைன் தன்னை நிலை நிறுத்தியதை புட்டீனால் உள் வாங்க முடியவில்லை. உக்ரைன் - ரஷ்யாவின் ஒரு பகுதி. உக்ரைன் - ரஷ்யாவை என்றும் எதிலும் ஆதரிக்க வேண்டுமென்று புட்டீன் அடித்துக் கூறினான். இதை உக்ரைன் ஏற்றுக் கொள்ளவில்லை. ரஷ்யாவின் இன்றைய பலத்தை மேற்கு நாடுகளுக்கும் வட அமெரிக்காவுக்கும் புலப்படுத்த வேண்டும் என்ற ஒரு வேட்கையில் புட்டீனுக்கு இருந்து வந்தது.

### பதுக்கிய பணம்

உலகிலேயே மிகப் பெரிய பணக்காரன் புட்டீன் என்று மேற்கத்திய நாட்டு ஊடகங்கள் சொல்லியன. தன்னைச் சார்ந்தவர்களுக்கும் நிறையப் பணம் கொடுத்து, இவர்களை ரஷ்யாவின் Oligarch ஆக (சிலவராட்சி) வளர்த்து விட்டான் புட்டீன். ரஷ்யாவில் மட்டுமல்ல, மேற்கத்திய நாடுகளிலும் இவர்களின் சொத்துக்கள் உண்டு. இது மேற்கத்திய நாடுகளின் பரிசேயத்தனம். இவற்றைப் படிக்கும் பொழுது,ராஜபக்ஷாக்களின் வாடை அடிக்கவில்லையா? ஏழை நாடு



களின் பணத்தைச் சூறையாடி மேற்கத்திய நாடுகளில் பதுக்கி வைத்திருப்பது அந்த நாடுகளுக்குத் தெரியாதா? அந்தந்த நாடுகளின் உளவுப் படைகளுக்கு குறிப்பாக CIA (வட அமெரிக்க உளவுப் படை) போன்றவர்களுக்குத் தெரியாதா? நன்றாகவே தெரியும்.

### பொதுவுடமையில் பணக்கார கும்பல்

ரஷ்யா ஒரு பொதுவுடமை நாடு. கார்ள் மார்க்ஸ், லெனின் போன்றவர்கள் ஒரு பணக்கார வர்க்கத்திற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி, பொதுவுடமை பேசி பாட்டாளி வர்க்கத்திற்காக வாதாடியே ரஷ்யாவை ஒரு பொதுவுடமை நாடாகப் பிரகடனப்படுத்தினர். ஆனால், அண்மைக் காலத்தில் அதே பொதுவுடமை நாட்டில் மீண்டும் ஒரு பணக்காரக் கும்பல் தலை தூக்கி உள்ளது. புட்டீனின் காலத்தில் இவர்கள் ஓர் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளார்கள். இதை எதிர்த்தவர்கள் நசுக்கப்பட்டார்கள். ஊடகச் சுதந்திரம் முற்றாக அழிக்கப்பட்டது.

கார்ள் மார்க்ஸ் உடைய மார்க்சிஸம், மார்க்சீய நாடுகளிலேயே அழிந்து விட்டது. அவரது கனவு பகற்கனவானது. இலங்கை நாட்டை "இலங்கை ஜன நாயக சோசலிசக் குடியரசு" என்று பிரகடனப்படுத்தினார்கள். நடைமுறையில் இந்நாட்டில் ஜனநாயகமும் இல்லை, சோசலிசமும் இல்லை, குடியரசும் இல்லை.

### உனது நண்பர்கள் யார்?

ராஜபக்ஷாக்களின் நண்பர்களின் ஒருவர் தான் புட்டீன் - ரஷ்ய நாடு. இன்னொன்று சீனா. மாவோவின் புரட்சி இன்று மாறி சீனா ஒரு செல்வம் கொழிக்கும் நாடாக மாறியுள்ளது. ஆனால், சர்வாதிகாரம் தாண்டவம் ஆடுகின்றது. ஊடகச் சுதந்திரம் அடக்கப்பட்டு விட்டது. எதிர்ப்போர் அழிக்கப்படுகின்றார்கள். சிறுபான்மை ஒதுக்கப்படுகின்றது.

ஒரு முதுமொழி உண்டு "உனது நண்பர்கள் யாரென்று சொல்லு, நீ யார் என்று சொல்வேன்". ராஜபக்ஷாக்களின் "நண்பர்கள்" ரஷ்யாவும் சீனாவும். அவ்வாறெனில் ராஜபக்ஷா யார்?

### மதமும் அரசியலும்

ரஷ்யாவின் ஓர்த்தோடொக்ஸ் (Orthodox) திருஅவையின் பிதாப்பிதா கிறிள் (Kiril) என்பவர் தொடக்கத்திலிருந்தே இவர் ரஷ்யாவின் உளவுப் படை KGB உடன் தொடர்பு கொண்டவர். அதனாலேயே ஏணியில் விரைவாகவே ஏறி, இன்று ரஷ்யாவின் ஓர்தோடொக்ஸ் திருஅவையின் பேராயராக உயர்ந்துள்ளார் என்று அபிப்பிராயப்படுபவர் உண்டு. பேராயராக உயர்ந்துள்ளார் என்று சொல்வதை விட தன்னை உயர்த்தி உள்ளார் என்போரும் உளர்.

2017 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் ஆங்கில நாட்டு அங்கிளிக்கன் சபையின் தலைவரும் கன்ரபெறியின் பேராயருமான ஜஸ்ரின் வெல்பி ரஷ்யாவின் பேராயரைச் சந்திக்கச் சென்றார். இந்த சந்திப்பை ஒளிபரப்ப, ரஷ்ய ஊடகங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. ரஷ்யாவில் ஊடகச் சுதந்திரம் இல்லையென்பதை மீண்டும் இவ்விடத்தே குறிப்பிடுவது அவசியமென்று எனக்குத் தோன்றிற்று.

"உக்ரைன் - ரஷ்யாவின் ஒரு பகுதி. ரஷ்யாவிலிருந்து உக்ரைனைப் பிரிப்பது தவறு" என்று கிறிள் அடித்துக் கூறியதுமன்றி, உக்ரைனை ரஷ்யாவிலிருந்து பிரிக்கும் உக்ரைன் ஆயர்களையும் அவர் சாடினார். இதன் பின்னர் ஊடகக் கமிராக்கள் சென்ற பின்னர், கிறிள் அடக்கி வாசிக்க ஆரம்பித்தார். இதில் இருந்து புரிவதென்ன? ரஷ்ய ஊடகங்கள் வழியாக ரஷ்ய மக்களுக்கும் புட்டினின் காதுகள் இனிக்கவும் சொல்லிய வார்த்தைகள் அவை. கிறிள் ரஷ்யப் போரை ஆதரித்து ஆசீர்வதித்தும் உள்ளார். இது கிறிஸ்துவுக்குச் சான்று பகரும் வாழ்க்கையல்ல. பேராயரை ஆதரிக்காது உக்ரைன் மேல் போர் தொடுத்த ரஷ்யாவைக் கண்டித்த குருக்கள் ரஷ்யாவில் உண்டு. இவர்களைப் புட்டீன் சிறைப்படுத்தியுள்ளார்.

கிறிளுக்கும் புட்டீனுக்கும் உள்ள உறவில் அரசியலும் மதமும் கலந்து விட்டன. இது ஓர் ஆரோக்கியமான உறவல்ல. ஐரோப்பாவில் உள்ள ஒத்தோடெக்ஸ் ஆயர்கள் கிறிளை ஒதுக்கி விட்டார்கள்.

போப் பிரான்சிஸ் மென்மையானவர். கருணை கொண்டவர். கிறிஸ்துவின் உண்மையான சீடன். கண்டிக்க வேண்டியதை நேரடியாகவே கண்டிப்பார். தண்டிக்க வேண்டியவர்களைத் தண்டிப்பார். இப்பொழுதெல்லாம் அவர் நடக்க முடியாமல் அவதிப்பட்டாலும், போரினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட மக்கள்பால் கருணை கொண்டு, போரை நிறுத்த மொஸ்கோ சென்று புட்டீனைச் சந்திக்க விரும்புவதாக அறிவித்துள்ளார். புட்டினுக்கு போப் பிரான்சிஸ் அவர்களையிட்டு நல்லெண்ணம் உண்டு என்று சில ஆங்கிய ஏடுகள் எழுதியுள்ளன. போப் பிரான்சிஸ் புட்டினைச் சந்திக்கும் பொழுது, புட்டினுடைய பூசைப் பரிகாரனான (Alter boy) கிறிள் இருக்க வேண்டிய அவசியமில்லை என்று போப் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

அரசியலும் மதமும் கலக்கக் கூடாது. வரலாற்றில் இருந்து நாம் பாடங்கள் கற்க வேண்டியது அவசியம். கிறிஸ்தவம் இத்தவறை இழைத்திருக்கிறது. மத நெறிகளை கிஞ்சித்தும் மதிக்காத அரசியல்வாதிகள், மதத்தை தங்கள் சுயநலன்களுக்காக பயன்படுத்துகிறார்கள். பௌத்த பீடங்கள் நோக்கி குடம் தூக்கும் அரசியல் வாதிகள் கொலை செய்திருக்கிறார்கள். பெருமளவில் மக்கள் பணத்தைச் சூறையாடி இருக்கிறார்கள். பின்னர் கை நிறைய கயிறு கட்டியிருக்கிறார்கள். இவர்களுடைய கள்ளமும் குள்ளமும் மதபீடங்களுக்குத் தெரியாதா? அன்றேல் தெரிய விரும்பவில்லையா? அன்றேல் உண்மையை மறுத்தார்களா?

பேராயர் மல்கம் ராஜபக்ஷாக்களின் அதிலும் குறிப்பாக மகிந்தாவின் நண்பரல்லவா? அந்த நேரம் கொழும்பில் பட்டப்பகலில் ஊடகவியலாளர் கொலை செய்யப்பட்டார்களே? அது பேராயருக்குத் தெரியாதா? கொழும்பில் வெள்ளை வானில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை பேராயருக்குத் தெரியாதா? வன்னியில், ஒரு சிறு பகுதியில் இன்று ரஷ்யா உக்ரைனை அழிப்பது போல் குண்டுமாரி பொழிந்து அழித்தது பேராயருக்குத் தெரியாதா? முள்ளிவாய்க்காலில் நிராயுத பாணிகளான அப்பாவி மக்கள் ஆயிரக்கணக்காக கொல்லப்பட்டார்களே! அதுவும் பேராயருக்குத் தெரியாதா? அன்றேல் தெரிய விரும்பவில்லையா? அன்றேல் மனச்சாட்சியை விறைத்து மறுத்தாரா?

(தொடரும்...)

கரைவையூர்ச் செல்வம்

### உயிர்த்த இயேசுவுடன் பயணிப்போம்

திருத்தூதருடன் பயணித்த உயிர்த்த இயேசு
திகிலுற்ற அவர்கள் நிலைகண்டு இரங்கினார்
திருப்புமுனையை அடைந்திட உடன் சென்றார்
திருப்பந்தியில் அமர்த்தி கண்கள் திறந்திட்டார்

இன்று திடுக்கிடும் விலைவாசி உயர்வும்
இன்றில்லை நாளை எனும் பாடசாலையும்
இடை இடையே வரும் மின்வெட்டும்
இயேசு உயிர்த்திட்டார் இடர்களைக்
களைந்திடுவார்

வினாக்களோ ஆயிரம் எம் உள்ளங்களில்
விடியலைக் கண்டிடுமோ இலங்கை என்று
விட்டில்பூச்சியின் முடிவு விளக்கின்
வெளிச்சத்தில் வியாபிக்கும் கூக்குரல்கள்
விண்ணகத்தை அதிரவைக்கும்

பச்சைக் குழந்தைக்குப் பருகிடப் பாலில்லை
பல்லற்ற முதியோர்க்குப் பசிதீர்க்க
உணவில்லை பணத்திற்கோ இன்று
மதிப்பும் இல்லை பருகி மகிழ்ந்திடுவீர்
மீட்பின் ஊற்றுக்களில்

கையில் பணமில்லாதோரை
அழைத்திட்ட இறைவன்
கைதிகளாகிவிட்ட எம்மையும்
அழைக்கிறார் அன்புடனே
கைப்பையோ மிதியடியோ வேண்டாம் என்று
கையறு நிலைகளில் உடனிருக்கும்
இயேசுதான்

திருமுழுக்கால் திருத்தூதர்
ஆகிவிட்டோம் நாமெல்லாம்
திரும்பவும் கோழையுள்ளம்
வேண்டாம் எம்மவர்க்கு
தினமும் பயணிப்போம்
கூட்டொருங்கியக்கத் திருஅவையாய்
திண்ணமாய் உயிர்த்த இயேசு
உடனிருப்பார்

செல்வி. ஜீன் அடைக்கலம்

# காவலன் கலசம்

## யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

**ஆயரின் அடக்கச் சடங்குகள்**

ஆயரின் திருவுடலை அயிக்ஸ் (Aix) நகரிலுள்ளஅமலமரித் தியாகிகள் சபையின் ஆலய நிலக்கீழ்க் கல்லறையில் இறைவனடி சேர்ந்த அமலமரித் தியாகிகள் சபையினரை அடக்கம் செய்யுமிடத்தில் அடக்கம் செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. 24ம் திகதி காலை அமலமரித் தியாகிகள் சபையினரின் "கல்வாரி" என்னும் இல்லத்தில் மார்செயில்ஸ் நகரில் இருந்த இரு அமலமரித் தியாகிகளது குழுமக்கள் பங்கெடுக்க முதலாவது இறுதி வழிபாட்டுச் சடங்கை சபை முதல்வர் தந்தை நிறைவேற்றினார். 10 மணியளவில் ஆயரின் திருவுடல் பவனியாகப் பேராலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. மார்செயில்ஸ் ஆயரின் தலைமையில் அடக்கத் திருப்பலி, பாடல் திருப்பலியாக பேராலயப் பிரதம குருக்கள் மற்றும் நகரில் உள்ள குருக்கள், துறவிகளின் பங்குபற்றுதலுடன் இடம் பெற்றது. திருப்பலியைத் தொடர்ந்து ஆயரின் திருவுடல் அய்க்ஸ் (Aix) நகரிலுள்ள அமலமரித் தியாகிகள் சபையினரின் இறுதி உறைவிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு அமலமரித் தியாகிகள் தலைமை இல்லச் சிற்றாலயத்தில் ஆயரின் திருவுடல் மக்கள், துறவிகள், குருக்கள் தரிசிப்பிற்காக அடுத்த நாள் (சனிக்கிழமை) காலை 10 மணி வரை வைக்கப்பட்டது. அங்குபேராயர், அவரது குருமுதல்வர்கள், சிறிய பெரிய குருமட மாணவர்கள், அருட்சகோதரிகள், சிறுவர் காப்பகச் சிறுவர்கள் மற்றும் பலகுருக்கள் துறவிகள் பங்கெடுக்க திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. பேரருட் திரு.சர்லன்டன் (Charlandon) அவர்கள் இரங்கலுரை நிகழ்த்தினார் 1 கொரி 15:10ல் உள்ள... இப்போதுநான் இந்த நிலையில் இருப்பதுகடவுளின் அருளால் தான், அவர் எனக்களித்த அருள் வீணாகி விடவில்லை 'என்ற வார்த்தைகளை மேற்கோள் காட்டியதாக அவரது உரை அமைந்திருந்தது.

ஆயர் செமேரியாவை ஒரு துறவியாக, மறை பணியாளராக, ஆயராக அவரது பணிகளை விபரித்தார். ஒரு குறையும் விட்டுவைக்க முடியாத ஒரு ஆயராகப் பணியாற்றியிருந்தார் என்றும் புனித பிரான்சிஸ்கு சவேரியார் தான் இறுதியில் செல்ல விரும்பிய மறைதளத்தை (சீனாவை) நோக்கியவராக உயிர் துறந்ததைப்போல ஆயர் செமேரியாவும் இன்னுமொருமுறை இறைவன் தமக்குத் தந்த, தாம் வெகுவாக அன்பு செய்து பணியாற்றிய மறைத்தளத்தில் கால் பதிக்க முடியாதவராக இறைவனடி சேர்ந்தார் என்று தமது இரங்கலுரையை நிறைவு செய்தார். ஆயரவர்கள் தமது அன்புக்குரிய தந்தையும் நிறுவுநருமாகிய புனித யூஜின் டிமசனட்டுடனும் மற்றும் எண்ணிறைந்த அமலமரித்தியாகிகளுடனும் அன்பினதும், ஆன்மீகத்தினதும் மறைசாட்சியாக ஒரு விதத்தில் உரிய காலம் வருமுன்னே (தமது 54வது வயதில்) இறை சந்நிதானம் சென்றார். அவரது திருவுடல் அவ்விடத்தில் இறைவனடி சேர்ந்த மற்ற அமலமரித் தியாகிகளுடன் அடக்கம் செய்யப்பட்டது.

**ஆயர் செமேரியாவின் ஆயர்த்துவ பணிகள் - ஒருமீளாய்வு**

ஆயர் செமேரியாவின் 20 வருடப்பணி வாழ்வில் ஏறக்குறைய 10 வருடங்கள் யாழ் திருத்தூது மறைமாவட்டத்திற்குப் பொறுப்பான ஆயராகப் பணியாற்றியுள்ளார். இந்தப்பத்து ஆண்டுகளும் பரந்து விரிந்த திருத்தூது மாவட்டம் முழுவதும் பயணம் செய்துசில இடங்களில் 2 மாதத்திற்கு மேல் நீடித்த மகா ஞானொடுக்கங்களையும் சில இடங்களில் 1 மாத ஞானொடுக்கங்களையும் நாடாத்தி முழுத்திருத்தூது மாவட்டத்தின் ஆன்மீகத்திற்கும் புத்துயிர் அளித்தார் எனலாம். இலங்கைக்கு வருமுன்னே ஐரோப்பாவில் கோர்சிக்காத்தீவில் நடாத்திய மகாஞானொடுக்கம் வழியாக உறங்கிக் கிடந்த மக்களின் ஆன்மீகத்துக்குப் புத்துயிர் அளிப்பதற்கு ஏற்ற செயற்பாடு மகாஞானொடுக்கம் என்றஆன்மீகச்செயற்பாடுஎன்பதில் தளராதநம்பிக்கைகொண்டிருந்தார் எனமுன்னர் பார்த்தோம்.

இங்கு யாழ் திருத்தூது மாவட்டத்தில் ஆயர் பெற்றக்கீனியுடன் வந்து சொற்ப நாட்களிலேயே இங்கு வாழ்ந்து வந்த கத்தோலிக்கர் கடந்த சில தசாப்தங்களாகப் போதிய ஆன்மீக வழிகாட்டுதலின்றி, அருளடையாளங்களின்றி வாழ்ந்து வந்த நிலையில் இறைமக்களைச் சரியான தடத்தில் வழிநடாத்த மகா ஞானொடுக்கங்கள் தான் ஒரே தீர்வு என்பது செமேரியா ஆண்டகையின் எண்ணமாயிருந்தது. ஆயர் பெற்றக்கீனி இதனை ஏற்றுக்கொண்டாலும் ஆளணிப் பற்றாக்குறையால் அவர் ஆயராக இருக்கும் வரை அவர் மகா ஞானொடுக்கங்களை ஒழுங்குபடுத்த உடன்படவில்லை பின்னர் ஆயர் செமேரியா யாழ் திருத்தூது மாவட்டப் பொறுப்பை 1847ல் ஏற்றவுடனே மகாஞானொடுக்கங்களை திருத்தூது மாவட்டம் முழுவதுமாக ஏற்பாடு செய்தது மட்டுமன்றி தாமே நேரடியாகச் சென்று கலந்தும் கொண்டார். இவ்வாறாக இன்று வரை வடபகுதியில் மட்டுமன்றி இலங்கை முழுவதும் இவ்வாறான மகா ஞானொடுக்கங்களுக்கு அத்திவாரமிட்டு ஒழுங்கமைத்தவராக இவர் விளங்குகின்றார். இவ்வாறான மகா ஞானொடுக்கம் முதன் முத லாக யாழ் / ஊர்காவற்துறையில் எவ்வாறு ஆயர் செமேரியா தலைமையில் இடம் பெற்றது என்று முன்னர் பார்த்தோம். அதனைத் தொடர்ந்து வடக்குத் திருத்தூது மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் மகா ஞானொடுங்கங்களும் மற்றும் ஆயரின் தரிசிப்புக்களும் இடம் பெற்றன. ஆயர் தரிசிப்பு எனும் போது ஆயர் பங்குக்குச் சென்று சிலநாட்கள் அல்லது இரண்டொரு வாரங்கள் தங்கியிருந்து பல்வேறு ஆன்மீகச் செயற்பாடுகளில் முழுமையாக ஈடுபட்டு, மக்களை சந்தித்துக் கலந்துரையாடி அவர்களது பல்வேறு தேவைகளைக் கேட்டறிந்து ஆவன செய்வதையும் உள்ளடக்கியதாக இருந்தது.

ஆயர் செமேரியாவின் தியான/தரிசிப்பு அட்டவணை எவ்வாறு தமது பணித்தளத்தில் இடங்களுக்கும் சென்று பணியாற்றி வந்தார் என்று காண்பிக்கின்றது. ஆயரின் திருத்தூது மாவட்டத் தரிசிப்புக்கள் எல்லாம் மாட்டு வண்டிலில் தான் இடம்பெற்றன.

**1. ஊர்காவற்றுறை மறைத்தளம்**
ஊர்காவற்றுறை (Kayts) மகா ஞானொடுக்கம் 1857 ஒக்டோபர்-நவம்பர் மறுதரிசிப்பு 1864
நெடுந்தீவு - 1860
புங்குடுதீவு - 1860 மே மாதம்
மண்டைதீவு - 1860

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

**2. யாழ்ப்பாண மறைத்தளம்**
யாழ்ப்பாணநகரம் - மகாஞானொடுக்கம் 1857 டிசெம்பரிலிருந்து - 1858 பெப்ரவரி வரை
நாவாந்துறை - 1863, 1866
நவாலி - 1863
வழிமீசாம் - 1860

**3. வலிகாமம் மறைத்தளம்** (கிழக்கு,மேற்கு)
வலிகாமம் கிழக்கு - மகாஞானொடுக்கம் 1857 நவம்பர் - டிசெம்பர்
வலிகாமம் மேற்கு - 1863, 1865
**4. பருத்தித்துறைமறைத்தளம்** - 1863
**5. மிருசுவில் மறைத்தளம்** - 1863
**6. முல்லைத்தீவு மறைத்தளம்** - 1858 செப்ரெம்பர்
**7. திருகோணமலை மறைத்தளம்**
- மகாஞானொடுக்கம் - 1858 மே-ஜூன்
**8. மட்டக்களப்பு மறைத்தளம்** - மகா ஞானொடுக்கம் - 1858 ஜூலை-ஆகஸ்ட்
சொறிக்கல் முனை, 1858 ஜூலை
**9. விடத்தல் தீவு** - 1859 ஜூன்
**10. மாதோட்டம்** (வடக்கு தெற்கு) மகா ஞானொடுக்கம், 1859 ஜூலை, ஆகஸ்ட்
வங்காலை
11. கல்கமுவ மறைத்தளம் - 1866
12. கல்பிட்டி மறைத்தளம் - 1866

(தொடரும்...)

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

நான் குருவாகி ஓர் இறையியலாளராக
உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும்
ஆசிய நாடுகளின் அடிப்படையிலும்,
எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல்
சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன்.
அவற்றை இங்கே தருகின்றேன்.
*- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்*

**12**

### அத்தியாயம் 7



**7.2 தமிழ்க் கிறிஸ்தவர்களும் பொதுவான ஆர்வத்துடன் சங்க ஏவுதல்களை வரவேற்றனர்.**

சங்கம் முடிந்து நாடு திரும்பியதும் ஆயர்களின் ஏவுதலிலும், வழிகாட்டலிலும் பல முயற்சிகள் ஆர்வத்துடன் முன்னெடுக்கப்பட்டன. விவிலியம், சங்க ஏடுகள் வழிபாடுகள் தமிழில் மொழி ஆக்கம் செய்யப்பட்டன. பாடல்கள் பல இயற்றப்பட்டன. அருட்திரு அமலோற்பவதாஸ், எட்வேட் பிரான்சிஸ் போன்றவர்களின் ஊக்கத்துடன் விவிலியம், வழிபாட்டு, மறைக் கல்வி, மறை ஆசிரியர்கள், இத்தகைய பல முயற்சிகள் அவைக்கான மையங்களினால் நடத்தப்பட்டன. தென் இந்தியாவிலும், இலங்கையிலும், இருக்கும் தமிழ் கிறிஸ்தவர்களும் திருஅவைகளும் மகிழ்ச்சியுடன் பயனடைந்தனர்.
கூட்டம் கூட்டமாகக் குருக்கள், துறவியர், பொதுநிலையினர் விழிப்புணர்வுக் கூட்டங்களில் பங்கு பற்றிப் பயனடைந்தனர்.
(என்னைப் பொறுத்த மட்டில், நான் பெற்ற இறையருளின் கொடையாக 1976ஆம் ஆண்டு தொட்டு 1996ஆம் ஆண்டுவரை இலங்கையிலும், ஆசிய நாடுகளிலும், ஓர் ஆசிய இறையியலாளராகப் பல கூட்டங்களில் பங்கு பற்றி உதவி செய்தேன். அத்தோடு உரோமையில் 1975, 1987 ஆண்டுகளில் நடந்தேறிய ஆயர் மன்றங்களின் போதும் (Bishops' Synods on evangelisation & Culture, Laity) உரோமையில் தங்கியிருந்து ஆசிய ஆயர்களுக்கு ஊக்குவிப்புப் பணிபுரிந்தேன்.)

**7.3 திருஅவைகள் பண்பாட்டு மயமாக்குதலை மிக ஆர்வத்துடன் வரவேற்றனர்**

இதில் அதிசயமில்லை. மொழி கலை கலாசாரத்தில் அளவில்லா பற்றுடைய தமிழருக்கு, சங்கம் ஊக்கப்படுத்திய பண்பாட்டு மயமாக்குதல், பெரு மகிழ்ச்சியை ஊட்டிற்று. நட்டுவக்காரனுக்கு நொட்டியா காட்ட வேண்டு மென்பர். பல நூற்றாண்டுகளாகக் கிறிஸ்தவமும் அதன் திருஅவைகளும் தமிழா் மத்தியில் அந்நிய ஐரோப்பிய மதமாக பிற சமயத்தவரால் கருதப்பட்டது மாத்திரமல்ல, தமிழ் கிறீஸ்தவர்களும் தங்கள் வழிபாடுகளிலும், தலைமைத்துவத்திலும், இதை உணா்ந்தனா். ஆகையினால் நீண்ட காலத்தாகம் தீர, ஆயா் குருக்கள் மாத்திரமல்ல, அநேக பொதுநிலையினரும் ஆர்வத்துடன் செயலில் ஈடுபட்டனா்.

**7.4 தமிழிலே இறைவார்த்தை**

முதலாவதாக எமது வேதாகமம் தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டு, இறைவனின் வார்த்தை தமிழிலே வாசிக்கப்பட ஆரம்பித்தது. வழிபாடுகளில் மாத்திரமல்ல வீடுகளிலேயும், சகல சந்தர்ப்பங்களிலேயும், வேதாகமத்தை மக்கள் தமிழிலே வாசித்துச் சிந்தித்துப் பயன் பெறக்கூடியதாக இருந்தது. அந்த வேதாகமத்தைத் தங்களுடைய சூழலுக்கு ஏற்ப அதாவது சூழலின் சவால்களுக்கு ஏற்ப ஓரளவிற்கு வியாக்கியானம் செய்யக்கூடியதாக நிலைமை மாறி இருந்தது.

**7.5 தமிழிலே வழிபாடுகள்**

அது மாத்திரமல்ல திருப்பலிப்பூசை தமிழிலே கொண்டாடுவதற்கு வழிவகுக்கப்பட்டது. இலத்தீனிலே செபங்களைச் சொல்லுவதையும், இலத்தீன் பாடல்களையும் நிறுத்தி, முழுமையாகத் தமிழிலே செபிக்கவும், பாடவும் வழி வகுப்பட்டது. இவைகளைப் போதியளவு கட்டுப்பாட்டுடன் செய்வதற்கு தமிழ் நாட்டிலேயும் இலங்கையிலும் வழிபாட்டு, இறையியல், வேதாகம மையங்களை நிறுவி அவைகளுடாக பண்பாட்டு மயமாக்குதலை வழிநடத்தி ஊக்குவித்தனர்.

**7.6 மாற்றங்களை ஊக்கப்படுத்த, ஒழுங்குபடுத்த, தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் மையங்கள்**

மொழியில் மாத்திரமல்ல வழிபாட்டு சைகை காட்டு விதங்களிலும் அலங்கார முறைகளிலும் தமிழருடைய பாரம்பரிய முறைகளுக்கு வழி வகுக்கப்பட்டது.

வழிபாட்டு ஆரம்பத்தில் தமிழ் முறைப்படி ஆயர் குருக்களை மாலையிட்டு ஆராத்தி எடுத்து, பொட்டு வைத்து வரவேற்பது, கைகோர்த்துத் தலை வணங்கும் முறை, சமாதானத்தை கைகோர்த்துத் தலை குனிந்து பரிமாறிக் கொள்வது, தரையில் இருந்து பலிகளை நடத்துவது, தூபம் காட்டுவது, ஒருவரை ஒருவர் அரவணைப்பது என்பன, தமிழ் முறையின்படி செயற்படத் தொடங்கின.

அத்தோடு தமிழருடைய பண்டிகைகள் தைப்பொங்கல் போன்றவை எங்களுடைய வழிபாடுகளிலும் இடம்பெற்றன. எது எது எங்களுடைய கலை கலாசாரத்திலே நன்மையென்று மக்களுக்கு நல்லதாகத் தோன்றினதோ, அவைகளை எங்களுடைய கிறிஸ்தவ வழிபாட்டிற்குள் கொண்டுவருவது தமிழ் கத்தோலிக்கத் தலைமைத்துவத்தின் முயற்சியாக இருந்தது. இந்தத் தலைவர்களின் முயற்சிகளை மக்களும் மகிழ்ச்சியுடன் வரவேற்றுப் பயன்பெற்றனர்.

இந்த முயற்சிகள் தமிழ்த் திருஅவைகளில் மக்களையும் வழிபாடுகள் நடத்தும் குருக்களையும் ஒருவரோடு ஒருவரை இணைத்து, நெருக்கமாக எங்களுடைய மன்றாட்டுக்களையும் பணிகளையும் கூட்டுப்பலிகளாக, கூட்டுச் செபங்களாக மாற்றியுள்ளன. இதனால் வத்திக்கான் சங்கத்தில் தெளிவாக்கபட்ட பொதுநிலையினரின் பொதுக்குருத்துவம் (common priesthood of the faithful) என்பது நடைமுறையில் வந்தது.

ஆகையினால் குருக்கள் வழிபாடுகள் நடத்தும் பொழுது, மக்களை மறந்து, தம் இச்சைப்படி தனியாக நடக்கக்கூடாது. திருநிலைப்படுத்தப்பட்டவர்களும் திருமுழுக்கினால் குருத்துவ, அரச, தீர்க்கதரிசனப் பணிக்கான அடையாளங்களைப் பெற்ற மக்களும் இணைந்தே பலி விருந்தில் பங்கேற்கின்றனா்.

(தொடரும்..)

# காவலன் கலசம்




# என் கேள்விக்கென்ன பதில்!

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

(சுகி, வவுனியா)
**கேள்வி: காலிமுகத்திடல் அகிம்சை வழிப் போராட்டத்தை வன்முறையால் அடக்கும் அரசின் போக்கை என்ன என்பது?**
**ப:** சுகி, அரசின் வன்முறைப் போக்கு இன்று நேற்று அன்று, என்றும் ஒன்றுதான்! ஆட்சியில் இருந்த இரு கட்சிகளும் ஒரு செயல் திட்டத்தையே மிக நேர்த்தியாக அமுல்படுத்தி வந்திருக்கின்றது! ஆட்சிக்கு யார்வந்தாலும் அணுகுமுறை ஒன்றுதான்! அதனைச் செயற்படுத்தும் முறைகள் கொஞ்சம் வித்தியாசப்படுகின்றன. அவ்வளவுதான்!

*(அகிலன், மன்னார்)*
**கே: பொருட்களின் விலையேற்றத்தைப் பார்க்கின்றபோது ராஜபக்ச குடும்பத்தைவிடப் பெரிய திருடர்கள் உள்ளூர் கடைக்காரர்கள் என்று ஒருவன் கூறியதில் உண்மை இருக்கின்றதுதானே?**
**ப:** அகிலன், அவன் சொன்னதில் உண்மை இருக்கின்றது, ஆனால், ஒரு சிறு வித்தியாசம்! அவர்கள் மொத்த விற்பனைத் திருடர்கள், இவர்கள் சில்லறை விற்பனைத் திருடர்கள்!

*(சுதா, யாழ்ப்பாணம்)*
**கே: இலங்கையின் பொருளாதார நெருக்கடி, தமிழர்களாகிய நாங்கள் பட்ட துன்ப துயரங்களை சிங்கள மக்கள் ஓரளவிற்கேனும் உணர்வதற்கு ஒரு வாய்ப்பாக இருந்திருக்கும் எனக் கொள்ளலாமா?**
**ப:** கொள்ளலாம் சுதா! ஆனால், தமிழர்களின் உரிமை என்று வருகின்றபோது என்ன செய்வார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். காரணம், எல்லாம் பொருட்களும் சரியாகக் கிடைக்கத் தொடங்க மீண்டும் 'ஜயவேவா ஜயவேவா 'என்ற வெற்றிக் கோசம் எழலாம்! எதற்கும் கொஞ்சம் பொறுத்திருந்து பார்த்தால்தான் அவர்களின் உள்ளக் கிடக்கை வெளிவரும்!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*
**கே: ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலின் ஊடாக நாடாளுமன்றம் வந்த ஒரே ஒரு உறுப்பினராகிய ரணில் விக்கிரமசிங்க பிரதம மந்திரியாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கின்றார். அத்துடன் அவரை அநேகமாக அனைத்துக் கட்சிகளும் ஆதரிக்கின்ற நிலையில் இருக்கின்றன! இதனை ஆசியாவின் ஆச்சரியமாகக் கொள்ளலாமா?**
**ப:** ஆனந்தன், ஏன், ஆசியாவுக்குள் மட்டுப்படுத்தி அவர் தரத்தையும் நாட்டின் தரத்தையும் குறைக்கப் பார்க்கின்றீர்கள்! உலக ஆச்சரியமாகவோ அல்லது உலக அதிசயமாகவோ கொள்ளுங்கள்!

*(அன்ரன், யாழ்ப்பாணம்)*
**கே: வடகிழக்கு ஆயர் மன்றம் மே 18ம் நாளைக் குறித்து வெளியிட்ட அறிக்கை எப்படி இருக்கின்றது?**
**ப:** அன்ரன்,'வடகிழக்குத் தமிழர்கள் மே 18ஐ தமிழினப் படுகொலை நாளாக நினைவு கூருகின்றனர்'என்று மக்களின் மனநிலையைப் பிரதிபலித்துத் தமது அறிக்கையை வெளியிட்டுள்ளனர் மேலும், கௌதம புத்தர் கூறிய மூன்று விடயங்களான சூரியன், சந்திரன், உண்மை ஆகியவற்றை மறைக்க முடியாது என்றும் சில உண்மைகளைத் தெளிவாக வெளிக்காட்டி இருக்கின்றார்கள். மேலும், நாட்டின் பொருளாதார அரசியல் நெருக்கடி தெளிவான பாடத்தை புகட்டிநிற்கின்றது என்றும் வன்முறையால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்றும் பிரச்சினைகளுக்கான மூல காரணங்களை ஆராய்ந்து அவற்றை அடையாளம் கண்டு அவற்றை நிவர்த்தி செய்யவேண்டும் என்றும் கோடிட்டுக் கூறியிருக்கின்றார்கள்.

*(அருள், யாழ்ப்பாணம்)*
**கே: காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்ட அமைதிவழிப் போராட்டத்தை அரசு வன்முறையால் அடக்க நினைத்ததன் விளைவால் மிகப் பாரிய வன்முறைக்கு வழிவகுத்தது! இதனால், அரசு நல்ல பாடம் கற்றுக் கொண்டது என்று கூறலாமா?**
**ப:** றமேஸ், வரலாற்றில் அரசுக்கு இப்படி எத்தனை பாடங்கள் கற்பிக்கப்பட்டு விட்டன! அது, கற்றுக்கொண்ட பாடங்கள்தான் எத்தனை? வன்முறைக்குப் பழக்கப்பட்டு விட்ட நாடாக நமது நாடு மாறிவிட்டதோ என்ற ஐயமும் எழுகின்றது!

(யோசப், யாழ்ப்பாணம்)
**கே: குடும்ப ஆட்சி கலைந்துபோய் இருக்கின்றதுபோல் தெரிகின்றது! கலைந்த குடும்பம் மீண்டும் ஆட்சிப் பீடம் ஏறுமா?**
**ப:** யோசப், குடும்ப ஆட்சி இன்னும் முற்றுமுழுதாகக் கலைந்துபோகவுமில்லை, குலைந்துபோகவுமில்லை! பொருட்களை விலைகொடுத்து வாங்குவதுபோல அல்லது விளையாட்டுக் கழகங்கள் வீரர்களை ஏலத்தில் எடுப்பதுபோல நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைகொடுத்து வாங்கக்கூடிய வசதியும் வாய்ப்பும் நமது நாட்டில் இருக்கின்ற வரையில் எக்காலத்திலும் எதுவும் நடக்கலாம்! உதாரணமாக, பிலிப்பீன்ஸ் நாட்டுமக்கள் 1986ல் மார்க்கோஸின் ஊழல் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து அவனின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள். ஆனால் அவனின் மகன் பேர்டினன்ற் மார்க்கோஸ் யுனியர் 36 ஆண்டுகளின் பின் மீண்டும் 2022ல் ஆட்சிப் பீடம் ஏறியுள்ளார்! ஆகவேதான், நாடாளுமன்ற உறுப்பினர்கள் விற்கப்படும் வாங்கப்படும் நிலைமை நீங்கும்வரை அல்லது நீக்கப்படும்வரை குடும்ப ஆட்சி. கொடுங்கோலன் ஆட்சி, குப்பை ஆட்சி என எல்லாவகை ஆட்சிகளும் ஆட்சியாளர்களும் கோலோச்சுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு!

**அருட்பணி செ. அன்புராசா**

---

# வரலாற்றில் ஒரு தலைவர்

## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர்
## ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.



**யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராாதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.**

**(சென்ற இதழின் தொடர்ச்சி..)**

**2. மறை வாழ்வில் சீர்திருத்தங்கள்**

பரம்பரை விசுவாசம் போதும் என்ற மனநிலை இவ்விதமான பராமரிப்புப் பலத்தால் பல புறக்கணிப்புகள் தோன்றின. சில பங்குகளில் நிலச் சுவாந்தர்கள் (நில ஆதிக்கமுடையோர்) தம்மால் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் (தமது நிலங்களில் வேலை செய்வோருக்குத்) தமது ஆலய வழிபாடுகளில் ஓரிரு சந்தர்ப்பங்களைக் கையாலாகா நிலையில் வழங்கினர்.

ஆனால் தம்மிடம்கடலில் வேலை செய்கின்ற தாழ்த்தப்பட்டோருக்குத் தமது ஆலயங்களில் இடமில்லையென்று கடலாதிக்கம் கொண்டோர் (துப்புக் கடலைவிட - கிள்ளிக் கொடுப்பவர்கள், ஆழக் கடல் ஆதிக்கம் கொண்டோர் - அள்ளிக் கொடுப்பவர்கள்) மிக மிக இறுக்கமாக இருந்தனர். பல பரம்பரைக் கத்தோலிக்க குழுமங்கள் தமது பிடிவாதத்தால் அருட்பணியாளர்களைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர விழைந்தனர். அதேவேளை புதிய கத்தோலிக்கருக்கும் எதிர்ப்புகள் மத்தியில் பணியாற்ற வேண்டிய நிலையில் அருட்பணியாளர்கள் இருந்தனர். இந்த முரண்பாடுகளால் ஏற்கெனவே ஐரோப்பிய மறையறிவிப்பாளர்களின் கீழ் உருவான 'சாதிக்கொரு கோவில்'என்னும் பிடிவாதமும், கத்தோலிக்க தனிமுதல் வாதச் சமயத்தின் எதிர்மறைச் சாட்சியமும் இவரது காலத்திலும் தொடர்ந்த துன்பியல் சவால்களாகும்.

இவ்விதமாக இரண்டு பிரிவினராகத் தற்செயலாக அமைந்து விட்டநிலைமையானது, கத்தோலிக்க மறைக்குள் இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட பல பிரிவினைகள், போட்டி மனப்பான்மைகளுக்கும், பழிவாங்கல்கள் படுகொலைகளுக்கும், ஏனைய கிறிஸ்தவ சபைகள் மற்றும் சமயத்தவர்களின் விமர்சனங்களுக்கும் வித்திட்டது. அத்தோடு பல கத்தோலிக்கர்களின் வேறு சபைகளுக்கான வெளிச் செல்லல்களுக்கும் (வேறு கிறிஸ்தவ சபைகளுக்கான மதமாற்றம்), உறுதியான நம்பிக்கை அனுசரிப்பின்மைக்கும் (ஆலயப் பக்கமே வராமல் வெளியே நிற்கும் கத்தோலிக்கர்) காரணமாய் அமைந்தது. இது இன்று வரை தொடர்வதைக் காணலாம்.

நம்பிக்கைக் கையளிப்பற்ற மனநிலை பரம்பரைக் கத்தோலிக்கர்களிடையே முன்னோர் கையளித்த உறுதியான நம்பிக்கை இருந்தாலும், அடிப்படை மறையறிவு குறைந்த அறியாமையே மேலோங்கியிருந்தது. ஆலயத்தைச் சார்ந்த வழமையான சடங்கு சம்பிரதாய செயற்பாடுகளுக்கு அப்பால் மறையறிவில் ஆழமற்ற தன்மையே இவர்களிடம் காணப்பட்டது. முன்னோரிடமிருந்து வந்த பரம்பரை நம்பிக்கை ஓரிரு பாரம்பரியச் சமயச் செயற்பாடுகளிலும், ஆதிக்க மனநிலையிலும் மட்டும் வெளிப்பட்டது. ஆலயத் திருவிழாக்கள், நவநாட்கள், யாத்திரைகள் போன்ற ஓரிரு செயற்பாடுகளை மட்டும் குறையில்லாமல் செய்து விட்டால் போதும், திருவிவிலியம், திருவழிபாடு, ஆன்மீக வாழ்வு பற்றிய மறையறிவு தேவையில்லை என்னும் அறியாமையே காணப்பட்டது. இதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம். வயல் வேலைகளும், கடற்தொழில் வேலைகளும் ஒழிந்த நேரங்களில் ஆலயங்களை மட்டுமேசுற்றி, மக்களின் வாழ்வும் சிந்தனையும் இருந்தன. கல்வியறிவில் முன்னேறவேண்டும், அரசாங்க வேலை தேடவேண்டும், கிராமத்தை விட்டு நகரம் நோக்கிச் செல்ல வேண்டும் என்னும் தேவைகள், போதிய பணம் கிராம உழைப்பால் கிடைத்த காரணத்தால் இருக்கவில்லை. தொழில்நுட்ப வசதிகளும் மின்னஞ்சல் சாதனங்களும் இலத்திரனியல் தொடர்பாடல்களும் இல்லாத காலமது. கூட்டுக்குடும்ப வாழ்வாலும் இயற்கையுடனிணைந்த வாழ்வாலும் கிடைத்த மகிழ்ச்சியின் காரணமாக ஆலயத்தையே எப்போதும் நாடிச் செபத்திலேயே நேரஞ்செலவிட்டனர்.

ஆயினும் திருவழிபாடுகள் மக்களுக்குப் புரியாத இலத்தீன் மொழியில் இடம்பெற்றாலும் பயபக்தியுடனான பங்கு பற்றுதல் கூடிச் சென்றதேயொழியக் குறையவில்லை. இருந்தபோலும் தமது பாரம்பரியப் பக்தியையும், பணபலத்தையும், பரம்பரைக் கௌரவத்தையும் திருவழிபாட்டிற்கு (திருப்பலி, திருவருளடையாளங்கள், திருப்புகழ் மாலை) வெளியே ஏனைய ஆலயச் செயற்பாடுகளில் வெளிக்காட்டுவதற்குப் பின்வரும் வழிகளில் முயன்றனர். அதாவது, பாரம்பரியப் பக்தி முயற்சிகளாகிய கொடிமரமேற்றி இறக்கல், சொரூபப் பவனி செய்தல், வெடிவெடித்தல், விருத்தங்கள் பாடுதல், விருந்து கொடுத்தல், நாடகங்களை மேடையேற்றுதல், திருயாத்திரைகளைக் கேளிக்கை களியாட்டமாக்குதல் போன்றவை. இவற்றை மட்டும் நுணுக்கமாகக் கடைப்பிடித்துக் குறுகிய மனப்பான்மைக்குள் வளர்ந்தனர். இவ்வாறான அறியாமையே பங்குகளில் பல பிரச்சனைகளுக்குக் காரணமாயின.

**அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா**

(தொடரும்...)

## காவலன் கலசம்

# இடித்து அழிக்கப்பட்ட ஆலயத்தின் சிதைவுகளின் மேல் புதிதாகக் கட்டியெழுப்பப்பட்ட ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்தின் திறப்பு விழா




யாழ்ப்பாணத்தின் வலி வடக்குப் பிரதேசத்தில் காங்கேசன்துறையில் அழகு மிகு கடற்கரைக் கிராமமாய் அமைந்திருந்தது ஊறணி. ஊறணியின் பெயர் சொல்லும் அடையாளச் சின்னமாய் ஊரின் மத்தியில் அமையப் பெற்றிருந்ததுதான் புனித அந்தோனியார் ஆலயம். 05 குருக்களையும், 01 அருட்சகோதரனையும், 04 அருட் சகோதரிகளையும் கொண்ட 10 துறவியரை இறை பணிக்காய் தந்து பெருமை கொள்கின்றது நம் ஊறணி சமூகம்.

இவ்வூரின் புனித அந்தோனியாருக்கு ஆலயம் கட்டுவித்த வரலாறானது மிகவும் தொன்மையானது. 1848 ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டுக் கட்டியெழுப்பப்பட்டு பெரியதோர் பழமை வாய்ந்த ஆலயமாகி ஊறணி மக்களின் ஆரம்ப கால ஆன்மீகத்தை வளர்த்த பெருமை இவ் ஆலயத்தையே சாரும்.

காலப்போக்கில் பல்வேறு இடங்களிலிருந்து பக்தர்கள் நாடி வந்து புனிதரின் விழா கொண்டாடும் புனித ஸ்தலமாக கணிக்கப்பட்டது. பின்னர் பழமை காரண-மாகவும், பழுதுகள் காரணமாகவும் இவ்வாலயம் பங்கு மக்களால் அகற்றப்பட்டு 1982ம் ஆண்டு பங்குனி மாதம் அடிக்கல் நாட்டப்பட்டு அப்போதைய எமது பங்குத்தந்தை த.இ.தேவராஜன் அடிகளாரின் தலைமையில் ஊரவரின் பூரண ஒத்துழைப்புடன் ஆலயத்தின் பெரும் பகுதி கட்டி முடிக்கப்பட்டு அருட்தந்தை நேசராசாவின் குருத்துவ முதல் திருப்பலி கொண்டாடப்பட்டது. 1990 இல் ஆலயம் முழுமையாக அழகுறக் கட்டி முடிக்கப்பட்டது. அக் கோவில் ஊரவரின் முழுப் பொருள் உதவியுடன் சிறியவர் முதல் முதியவர் வரை ஆண், பெண் வேறுபாடின்றி கல் சுமந்து மண் சுமந்து தாங்களே கூலிகளாக நின்று தமது உடல் உழைப்பின் மூலம் அப்போதைய கணிப்பில் ரூபா 360000 செலவில் தமது வியர்வையும் இரத்தமும் கலந்து கட்டிய பிரமாண்ட ஆலயமாகக் கட்டி முடித்தார்கள். ஆனால் அந்தோ பரிதாபம் 1990 ஆனி மாதம் இடம்பெற்ற வலி வடக்கு ஊறணி மக்களும் இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் ஏதிலிகளாக அலைய நேரிட்டது. முழுமையாக ஊறணியும் இவ் ஆலயமும் இராணுவத்தினர் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது.

இடம்பெயர்ந்து தூர இடங்களில், வெளிநாடுக-ளில் இருந்த போதும் புனித அந்தோனியார் மேலிருந்த அளவு கடந்த பிணைப்பின் காரணமாக 1998 இல் இருந்து 2010ம் ஆண்டுகளுக்குள் நான்கு தடவைகள் இராணுவத்தினரின் அனுமதியுடன் புனிதரின் திருவிழாவைக் கொண்டாட ஊறணிக்கு வரையறுக்கப்பட்ட தொகையானோர் வந்து போயினர். 2010ம் ஆண்டு வருகையின் போது ஊரில் வீடுகள் மற்றக் கட்டிடங்கள் யாவும் பற்றைகள், மரங்கள் மத்தியில் பொலிவிழந்து காணப்பட்டாலும், முழுமையாகவே இருந்தன. ஆலயம் கூரையின்றி இருந்தது. வேறு எந்தச் சேதமும் ஆலயத்திற்கு ஏற்படவில்லை.

2009இல் நாட்டில் நடைபெற்ற யுத்தம் முடிவுக்கு வந்ததும் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த ஊறணிக்குப் போகலாம் என்ற சிறியதோர் ஒளிக் கீற்று தெரிய ஆரம்பித்தது. 2013ம் ஆண்டு ஊறணியின் மண்ணின் மைந்தன் அருட்தந்தை அ.அன்ரனிபாலா அடிகளார் இறைபணி நிமித்தம் ஊறணி வழித்தடத்தில் சென்றபோது ஊறணி புனித அந்தோனியார் ஆலயம் முற்றாக அழிக்கப் பட்டிருந்தது. அத்துடன் ஊரவரின் ஓரிரண்டு வீடுகள் தவிர அத்தனை வீடுகளும் மண்ணோடு மண்ணாக அழிக்கப்பட்டிருந்தன. மக்களுக்கோ சொல்லொணாத் துயரம், பேரிழப்பு. கதியிழந்த மக்களுக்கு விரைவாகவே ஓர் நற்செய்தியும் வந்தது. இலண்டனில் இறைபணியாற்றிய அருட்தந்தை தேவராஜன் அடிகளார் மீண்டும் ஊறணிக்கு வந்து பங்கைப் பொறுப்பேற்கவுள்ளார் என்பதே அச் செய்தியாகும்.

மீண்டும் புத்தொழி மீண்டெழுந்தது. தற்காலிக சிற்றாலயம் அமைக்கப்பட்டு மீள்குடியேற்றமாக வந்த சமூகம் மீண்டும் பங்குச் சமூகமாக செயற்பட வாய்ப்புக் கிடைத்தது. உயர் பாதுகாப்பு வலயத்திற்கு அண்மையில் இருப்பதாலும், பல்வேறு இராணுவ முகாம்களால் சூழப்பட்டிருப்பதாலும், பாரம்பரிய சமய சமூக சூழல் மாற்றப்பட்டுக் கொண்டிருப்பதனால், நம் விசுவாசத்தைப் பூர்வீகத்தைக் கட்டிக் காக்க வேண்டியது எல்லோராலும் உணரப்பட்டது. 13.06.2019 ஆனித் திருநாளன்று புதிய ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டு ஆலய கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகின.

சாம்பலிலிருந்து மீண்டெழுகின்ற பீனிக்ஸ் பறவையாய் ஊறணி மக்களும் மீண்டெழுந்தார்கள். முன்னர் தோள்கொடுத்த அதே பங்குத்தந்தை புலம்பெயர்ந்த தூர தேசங்களில் வாழ்கின்ற அதே ஊர் மக்கள், அந்தோனியார் பக்தர்களென நாலா பக்கங்களிலும் உதவிக் கரம் நீட்ட, இடித்தழிக்கப்பட்ட ஆலயத்தின் அதே அத்திபாரத்தின் மேல் மீண்டும் கட்டப்பட்டு புதிய ஆலயமாக ஊறணி புனித அந்தோனியார் ஆலயம் புதுப் பொலிவுடன் காட்சி அழிக்கின்றது. இதுவும் ஓர் புதிய வரலாறானது ஊறணி மக்களுக்கு.

இப் புதிய ஆலயத்தைக் கட்டி முடிப்பதற்கு உதவிக்கரம் நீட்டிய அத்தனை பக்தர்களுக்கும் நமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, 30.05.2022 இல் யாழ். ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களால் திறந்து வைக்கப் படும் என்பதை ஊறணிப் பங்கு மக்கள் மனமகிழ்வுடன் அறிவித்து நிற்கின்றார்கள்.

## 'திருமறை முத்துக்கள்'

அருட்பணி. நே. யூட்நாஸ்

### நம்பிக்கை அறிக்கையின் ஒன்பதாம் பிரிவு

**127.திரு அவை தான் போதிப்பதில் தவறிழைப்பதில்லை என்பதை எவ்வாறு நீர் அறிந்து கொள்கிறீர்?**

திரு அவையானது தான் போதிப்பதில் தவறிழைப்பதில்லை. ஏனென்றால் கிறிஸ்து பின்வருமாறு கூறுகிறார்: " பாதாளத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றி கொள்ளா. விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன்." " தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார்" நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார். அமைதியை உங்களுக்கு விட்டுச்செல்கிறேன்" என் அமைதியை உங்களுக்கு அளிக்கிறேன். 'உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியானவர் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார். அவர் தாமாக எதையும் பேசமாட்டார் தாம் கேட்பதையே பேசுவார். திரு அவையோடு தூய ஆவியான வரும் உலக முடிவுவரையும் எந் நாளும் இருப்பார் (காண். மத் 16:18, யோவான் 14:14-26, மத் 28:20).

**128. புனிதர்களின் சமூக உறவு என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?**

புனிதர்களின் சமூக உறவு என்பது விண்ணுலகம், மண்ணுலகம், உத்தரிப்புஸ்தலம், ஆகியவற்றுள் இருக்கும் திரு அவையின் உறுப்பினர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் ஒன்றிணைந்திருப்பதை குறிக்கிறது. அனைவரும் இயேசுக்கிறிஸ்துவின் ஒரே உடலில் இணைந்திருக்கின்றனர்.

**129.எவ்வாறு மண்ணுலகில் வாழும் நாம் ஒவ்வொருவரும் ஒருவரோடு ஒருவர் ஒன்றித்திருக்கின்றோம்?**

ஒரே நம்பிக்கையை அறிக்கையிடுவதிலும், ஒரே அதிகாரத்திற்குக் கீழ்ப்படிவதிலும், எங்களுடைய செபங்களாலும் நற்செயல்களாலும் ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பதனூடாகவும் மண்ணுலகில் வாழும் இறைமக்களாகிய நாம் ஒவ்வொருவரும் ஒன்றிணைந்து வாழுகின்றோம்.

**130.எவ்வாறு நாம் விண்ணுலகில் வாழும் புனிதர்களோடு ஒன்றிணைந்துள்ளோம்?**

விண்ணுலகில் வாழும் மகிமையடைந்த திரு அவையின் உறுப்பினர்களானதாலும் புனிதர்களோடு ஒன்றிணைந்து செபிப்பதாலும் அவர்களுடைய பரிந்துரையை வேண்டுவதாலும் நாம் புனிதர்களோடு ஒன்றிணைந்துள்ளோம்.

**131.உத்தரிப்பு ஸ்தலத்தில் வேதனைப்படும் ஆன்மாக்களோடு எவ்வாறு நாம் ஒன்றிணைந்துள்ளோம்?**

எங்களுடைய செபங்களாலும் நற்செயல்களாலும் உத்தரிப்பு ஸ்தலத்தில் இருக்கின்ற ஆன்மாக்களுக்கு உதவி செய்வதன் மூலமாக அவர்களோடு நாம் ஒன்றிணைந்துள்ளோம். "இறந்தவர்கள் தங்கள் பாவத்தினின்று விடுதலை பெறும்படி அவர் அவர்களுக்காகப் பாவம் போக்கும் பலி ஒப்புக்கொடுத்தார்" (2 மக். 12:46).

(தொடரும்...)

# திறந்த ஓவியப்போட்டி முடிவுகள்

**அமைதி, நல்லிணக்கம் மற்றும் வன்முறைகளற்ற பண்பாட்டை மேம்படுத்த வடக்கு கிழக்கு ஆயர்கள் மன்றத்தின் அமைதி ஆய்வு நிறுவனத்திற்காக நடாத்தப்பட்ட திறந்த ஓவியப்போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.**

யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய நான்கு மறைமாவட்டங்களிலிருந்தும் இப்போட்டிகளை ஒழுங்கு செய்ய இணைப்பாளர்கள் ஏற்படுத்தப்பட்டார்கள். இப் போட்டியில் 93 ஆக்கங்கள் கிடைக்கப்பெற்றன. நான்கு மறைமாவட்டத்திலிருந்தும் நான்கு நடுவர்கள் தேருனர்களாகச் செயற்பட்டார்கள். அவர்களது விபரம்: யாழ்ப்பாணம் தேசிய கல்விக் கல்லூரி விரிவுரையாளரான திருமதி M.E. பச்சி மரியதாசன், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவன விரி-வுரையாளர், திரு. V. சுமன்ராஜ், திருகோணமலை புனித மரியாள் கல்லூரி ஆசிரியர் - திரு.தர்மலிங்கம் தர்மநாத், மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை ஆசிரியர் - திரு. J.அன்ரனிதாஸ் டலிமா. வெற்றி பெற்றவர்களுக்கும், பங்குபற்றியவர்களுக்கும் பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவிப்பதுடன், இவர்களை ஊக்குவித்த பங்குத்தந்தையர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

### சான்றிதழும் பணப் பரிசும் பெறுவோர் விபரம் பின்வருமாறு

1ம் இடம் :- றொபேட் பானுஷா - மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி

2ம் இடம் :- நொயல் குறூஸ் ஆதீரா - 22/2 சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

3ம் இடம் :- J. அனா ஜீவலோஜினி - மாதா கோவில் வீதி, பெரியகல்லாறு.

4ம் இடம் :- ஞானப்பிரகாசம் ஜெஸ்மிகா - 73, R.K.M. வீதி, காரைதீவு. (கி.மா)

5ம் இடம் :- அமிர்தசெல்வன் ஜெனுஜன் - 165/10, நாலாம் மைல் போஸ்ட், ஆனைக்கோட்டை.

**ஆறுதல் பரிசில்கள்**

1. J. ஜெனோட்ஷன் - 24/3, சென். அன்ரனீஸ் வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்
2. D. நித்திக்கா - மயான வீதி, மல்வம், உடுவில், யாழ்ப்பாணம்
3. A.நொயிலின் நிஷாரா - குயின்சி ஸ்ரோர்ஸ், சூறாவத்தை, சுன்னாகம்
4. S.பிரபா பிரியா - 969/2, வளன்புரம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்
5. மரியதாஸ் சந்தியாப் ஜெஸ்வின் - பிள்ளையார் கோவில் வீதி, தும்பளை, பருத்தித்துறை
6. நிலூசா பீற்றர் - 42/5, மவுன்கார்மல் வீதி, யாழ்ப்பாணம்
7. எட்வின் அருள்ராஜ் விதுர்சன்ராஜ் - பிரான்சிஸ்கன் அருட்சகோதரர்கள், அசிசின் நிவாச, துடாரிக்குளம் வீதி, செட்டிக்குளம்
8. P. மேரி ஜெனீபர் - 31/1, முதலாம் குறுக்குத்தெரு, பாஷையூர், யாழ்ப்பாணம்
9. தோமஸ் அமல்ராஜ் குறூஸ் - கொறற்றி றோட், பேசாலை -08, மன்னார்
10. மு.ஷெறோன் றோகித் - 13, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்

# விண்ணக வாழ்வின் 4ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
21 . 03 . 1935



உதிர்வு
04 . 06 . 2018

## அமரர் வென்டக்கோன் பொன்ராசா அன்ரன் கிளாறன்ஸ் ஆனந்தராசா

(ஓய்வு பெற்ற ஆசிரியர் – கென்றியரசர் கல்லூரி இளவாலை)

ஆண்டு நாலு ஓடி மறைந்தாலும்
எம் நெஞ்சில் நிலைத்திருக்கும் பாசதீபங்கள்
உங்கள் நினைவுகள் என்றும் அழியாது
கண்ணில் இமைபோல எம்மைக் காத்த அப்பாவே!
உங்கள் நினைவுகளுடன் என்றும் வாழ்கின்றோம்
நிகழ்வுகள் அனைத்தும் நினைவுகளாகி நிரந்தரமாயிற்று
சிரித்த முகம் எம்மைவிட்டுப் பிரிந்தது. உம் பாசம்
ஒன்றே எம்மைப் விட்டுப் பிரியாது. எம் வாழ்நாளெல்லாம்
புன் சிரிப்பாலும் கள்ளமில்லா உள்ளத்தாலும்
எம்மை அன்போடு நேசித்த உங்களை. எம்
இதயங்களில் சுமக்கின்றோம். உங்கள் ஆன்மா வான்
வீட்டில் உறைந்திட, படைகளின் ஆண்டவரை மன்றாடுகின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 03.06.2022 அன்று வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியில் பங்கு கொண்டு செபிக்க வேண்டுகின்றோம்.

AD-41

*407, கொறவப்பொத்தானை வீதி,*
*இறம்பைக்குளம்,*
*வவுனியா- 024 222 1984*

*மாறா நினைவுகளுடன்*
*மனைவி, பிள்ளைகள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்*

# 50ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
02 . 07 . 1952



உதிர்வு
02 . 06 . 1972

## அமரர் ஞானம் யேஸ்சீலன்

(யாழ். நீர்வேலி பரலோக மாதா ஆலயம்)

"இதோ உன்னைப் பெயரிட்டு நாமே அழைத்தோம்- ஆகவே நீ நமக்கே சொந்தம் "
- எசாயா 43:1

ஆண்டுகள் ஐம்பது
கடந்தால் என்ன?
அடுத்த ஜென்மம் ஆனால் என்ன?
நீர் கண்முன்னே விட்டு நீங்கி,
கனவாகிப் போனாலும்
மண் விட்டு மறைந்து
மாயமாகிப் போனாலும்
உம் நினைவுகள் எம்மை
வாட்டுகின்றதே
பரமனின் பாதத்தில் பக்தியோடு
நீர் அமர்ந்து எமக்காக வேண்டிடுவீர்
உம் ஆன்மா சாந்தி அடைய
என்றும் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்*
*சகோதரிகள், சகோதரர், மைத்துனர்,*
*மைத்துனிகள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,*
*யோசவ் யேசுநேசி.*

AD-40

### இடைக்கால அரசாங்கம்

(1ம் பக்கத்தொடர்ச்சி)

இரண்டாவதாக, கத்தோலிக்க ஆயர்கள் பேரவை (CBCSL) நாட்டிற்கு ஒரு தீவிரமான மாற்றம் தேவை என்று திட்டவட்டமாகக் கூறுகிறது. தற்போதைய ஆட்சிமாற்றத்துடன், உயிர் மற்றும் உடமைகளின் பாதுகாப்பு, கருத்து சுதந்திரம் மற்றும் நடமாடும்சுதந்திரத்தைஉறுதிப்படுத்தஒரு இடைக்காலஅரசாங்கம்நிறுவப்படவேண்டும். அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காமலும் அதன் விலைகள் கிடுகிடுவென உயர்ந்து வருவதாலும் மக்கள் பெரிதும் அவதிப்பட்டுவரும் நிலையில், அனைத்து மக்களின் அடிப்படைத் தேவைகளையும் உடனடியாக நிறைவேற்றவேண்டும் என வலியுறுத்துகிறோம். இடைக்கால அரசால் சீரமைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். எந்தவொரு அரசியல் சார்புமற்றும் தலையீடுகள் இன்றி நாட்டிற்கான சேவையை முன்னெடுப்பதற்கு நேர்மையான, திறமையான மற்றும் கொள்கை ரீதியான ஆற்றல் மிக்கவர்கள் அரசாங்கத்தின் முக்கியபொறுப்பு வாய்ந்த பதவிகளில் நியமிக்கப்படவேண்டும்.

பிரச்சினைகளைத் தீர்க்க வன்முறை தீர்வாகாது. போராடுபவர்கள் மற்றும் போராட்டம் நடத்துபவர்கள் அனைவரையும் ஒருபோதும் வன்முறையில் ஈடுபட வேண்டாம் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.அதேநேரத்தில் மக்களைப் பாதுகாக்கு மாறு காவல்துறை மற்றும் பாதுகாப்புப் படையினரை வேண்டிக்கொள்கிறோம். அமைதியான போராட்டக்காரர்களை ஒருபோதும் தாக்கவேண்டாம், அதுஅவர்களின் ஜனநாயக மற்றும் நியாயமான உரிமை. அரசியல்வாதிகளின் சூழ்ச்சிகளை நம்பி காவல்துறையினர் தங்கள் கடமையைச் செய்வதைத் தவிர்க்கக்கூடாது. அவர்கள் விரும்பினால் நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கும் முன், விசாரணை நடத்தப்பட்டு மக்களின் நிதி சொத்துக்கள் மீட்கப்படவேண்டும். நல்லறிவு நிலவவும், அமைதி திரும்பவும்,அரசியல் அதிகாரத்தின் அமைதியான மாற்றம் தாமதமின்றிநடைபெறவும்மன்றாடுமாறு அனைத்து விசுவாசிகளையும்நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். பௌத்த, இந்துமற்றும் இஸ்லாம் மதகுருமார்களுக்கும் மற்றும் அனைத்து மதங்களை பின்பற்றுபவர்களுக்கும் மக்களின் கவலைகள் தொடர்பில் எங்களின் ஒற்றுமையை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம். நாட்டிற்கும் எங்கள் அன்பானமக்களுக்கும் கடவுளின் ஆசீர்வாதங்களை நாங் கள் விரும்புகிறோம்.

# நினைவழியா நினைவுகளுடன்...

8ம் ஆண்டு நினைவு



அமரர்
றெஜினா
நீக்கிலாப்பிள்ளை
*பிறப்பு*
08.09.1945
இறப்பு
31.05.2014

அம்மா அப்பா
உயிர்கொடுத்து
எமைப் பெற்றெடுத்து
கண்ணின் மணிபோல்
எமை வளர்த்து
காலம் எல்லாம்
எமக்காய் வாழ்ந்து
துன்பங்கள் கண்டு துவழாமல்
துணிவுடன் எமை வளர்த்து
பல பாடுகள் பட்டீர்கள்
எம் தெய்வங்கள் நீங்கள் தான்
அம்மா, அப்பா உங்களை இழந்து
அநாதைகள் ஆனோம்
எமக்கு ஆறுதல் கூற வருவீர்கள்
எனக் காத்து நிற்கின்றோம்
உங்கள் ஆன்மா
நித்திய சாந்தியடைய
இறையருள் வேண்டுகின்றோம்.

1ம் ஆண்டு நினைவு



அமரர்
சவிரிமுத்து
நீக்கிலாப்பிள்ளை
பிறப்பு
27.08.1938
இறப்பு
21.01.2021

AD/44

குடும்பத்தினர்

# விண்ணக வாழ்வின் 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
19 . 10 . 1951



உதிர்வு
03 . 06 . 2021

## அமரர் ஜோசப் விக்ரர் ஜெயராஜா

(Rose Arts)

மனங்களில் நிதம் வாழும்
மன்னன் எங்கள் அப்பா
எமை விட்டு எங்கு சென்றீர்
எப்படி நாம் கேட்போம்?

உயிருள்ள எம்முடன் உயிர் மூச்சாகி
உயிர்ப்பற்ற எம் உடைமைகளில்
உண்மையின் உருவமாகி
உறைகின்ற அன்புருவே!

கலங்கரை விளக்கொன்று
கானல் நீராய்ப் போய்

ஓராண்டு ஆனதுவே
பிரிவின் வலி நீள்கின்றது
உம் கரங்களுக்கு எம்மை வைத்து
வழிகாட்டி உயர்வு தந்தீர்கள் - அப்பா!

உங்கள் கள்ளமற்ற அன்பையும்
உதட்டோரம் உதிர்க்கும் - உங்கள்
புன்னகையையும் காணாது
வாடி நிற்கின்றோம் -
உங்கள் ஆன்மா
இறைவன் அடியில் இறைப்பாற
இறைஞ்சிடுவோம் நிதம்...

*இல. 05, ஒடக்கரை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

AD-42

*இவரின் பிரிவால் துயருறும்*
*மனைவி, பிள்ளைகள்*

# சாவகச்சேரியில் தேசிய அன்பிய விழா



அன்பிய ஆண்டினை முன்னிட்டு இலங்கைக் கத்தோலிக்க திரு அவையின் அழைப்பின் பேரில் "கூட்டொருங்கியக்கத்தின் ஊடாக அன்பிய வாழ்விற்கான புதுப்பித்தல்" எனும் தொனிப்பொருளில் சாவ கச்சேரி புனித. லிகோரியார் ஆலயப் பங்குத்தந்தையோடு பங்குமக்கள் இணைந்து ஒழுங்குபடுத்திய தேசிய அன்பிய விழா நடைபெற்றது.

திருப்பலியோடு கலைநிகழ்வுகள் மற்றும் அன்பியப் பகிர்வு என்பனவும் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குனர் அருட் பணி.மில்பர் வாஸ் CMF அடிகளார் கலந்து சிறப்பித்தார்.

அத்தோடு யாழ்.மாவட்ட அன்பியங்களின் பொறுப்பாளர் அருட்பணி. சசிகரன் அடிகளார், அருட்பணி. பஷில் கிளைன் அடிகளார், எழுதுமட்டுவாழ் திருச்சிலுவைக் கன்னியர் மட குழுமத்தலைவி அருட்சகோதரி ரஜனி, மற்றும் அருட்சகோதரிகள் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

# மனித மாண்பை மதிப்போம் எனும் கருப்பொருளில் ஓவியப்போட்டி



கியூடெக் கரித்தாஸ் ஒருங்கிணைந்த சமூக மேம்பாட்டு சிறுவர் கழகங்களுக்கான ஓவியப்போட்டி கியூடெக் கரித்தாஸ் மண்டபத்தில் இயக்குநர் அருட்பணி ச.இயூஜின் பிரான்சிஸ் அடிகள் தலைமையில் 16.05.2022 அன்று நடைபெற்றது. இப்போட்டியில் ஆனைக்கோட்டை, புதிய சோனகத்தெரு, கொழும்புத்துறை மணியந் தோட்டம், உதயபுர சிறுவர் கழகங்களில் இருந்து 60 மாணவர்கள் பங்கேற்றனர்.

மனித மாண்பை மதிப்போம் எனும் கருப்பொருளில் நடைபெற்ற ஓவியப்போட்டி மூன்று பிரிவுகளாக நடை பெற்றது. இயக்குநர் உரையாற்றுகையில் பாடசாலை மாணவர்கள் மனங்களில் மனித மாண்பை மதிக்கும் பண்பினை சிறுவர் மனங்களில் புதிய சிந்தனைகளில் வெளிப்படுத்தவும், சகல பிரதேச, சமய மாணவர்களுடன் நல்லுறவை மேம்படுத்தவும், மகிழ்வான சூழலில் மனநிறைவான மகிழ்வூட்டல் குழுவிளையாட்டுக்கள் மூலம் ஆற்றல் திறன்களை வெளிப்படுத்தக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்தும் சிறுவர்களே வாழ்வின் வெற்றியாளர்கள் ஆகின்றனர் எனத் தெரிவித்தார்.

# நாட்டின் சுமுகமான சூழல் ஏற்பட பிரான்சிஸ்கன் 3ம் சபை வழிபாடு



யாழ்.மறைமாவட்ட பிரான்சிஸ்கன் 3ம் சபை பொது நிலையி னரால் நாட்டின் சுமுகமான சூழல் ஏற்பட வேண்டி யாழ் மரியன்னை பேராலயத்தில் ஆன்மீக இயக்குநர் அருட்பணி அருள்தாஸன் அடிகளார் தலைமையில் நற்கருணை வழிபாடு கடந்த 07.05.2022 அன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரான்சிஸ்கன் சபைச் சகோதரன் தொபியாஸ் அடிகளாரும் மற்றும் மன்னார் மறைமாவட்ட பிரான்சிஸ்கன் 3ம்சபை பொதுநிலையினர்களும் அருட்சோதரி ரூபராணி அவர்களும் கலந்து சிறப்பித்துள்ளனர். முதலில் திருச்செபமா லையுடன் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு நற்கருணை ஆசீர்வாதத்துடன் இந்நிகழ்வு நிறைவெய்தியது .

இந்நிகழ்வை நடாத்த யாழ் மரியன்னை பேராலயப் பங்குத் தந்தை அருட்பணி J.J. மவுலிஸ் அடிகளார் பூரண ஒத்துழைப்பை வழங்கி நின்றார்.

# பருத்தித்துறை மறைக்கோட்டத்தில் வியாகுலப் பிரசங்கப் போட்டி



பருத்தித்துறை மறைக்கோட்ட பொது நிலையினர் கழகத்தால் நடாத்தப்பட்ட பங்கு ரீதியிலான வியாகுலப்பிரசங்கப் போட்டியானது பருத்தித்துறை புனித தோமையார் ஆலய மண்டபத்தில் கடந்த 15.05.2022 அன்று நடைபெற்றது.

பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி அ.பெ. பெனற் அடிகளாரால் இப்போட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப் போட்டியில் பருத்தித்துறை மறைக்கோட்டத் தின் பங்குகளில் இருந்து போட்டியாளர்கள் மிகவும் ஆர்வமாகக் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

இரு பிரிவுகளாக இப்போட்டி ஒழுங்கு செய் யப்பட்டிருந்தது. இப் போட்டியினை மறைக் கோட்ட பொது நிலையினர் கழகத் தலைவரும் செயலரும் திறம்பட ஒழுங்கு செய்திருந்தனர்.

# தாளையடிப் பங்கில் முதல்நன்மை



தாளையடிப் பங்கில் புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு முதல்நன்மை திருவருட்சா தனம் வழங்கும் நிகழ்வு கடந்த 14ஆம் திகதி நடை பெற்றது.

பங்குத்தந்தை அருட்பணி வின்சன் அடிகளின் தலைமையில் நடைபெற்ற திருவருட்சாதனத் திருப்பலியில் எட்டு மாணவர்கள் முதல் நன்மை அருட்சாதனத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.


**Technician's பயிலுனர் தேவை**

கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியாவில்
இயங்கி வரும் பிரபல கிறிஸ்தவ
பல் வைத்திய நிலையத்திற்கு
18 தொடக்கம் 22
வயதிற்கிடைப்பட்ட கிறிஸ்தவ ஆண்கள் தேவை

Ad 43



கல்வி
G.C.E - O/L

சம்பளம் – ஆரம்பம் Rs – 30,000/=

உணவு உதவி, தங்குமிடம் வழங்கப்படும்

தொடர்பிற்கு
Director
International Dental
077 758 8729


# கொழும்புப் பேராலயத்தில் உறுதிப்பூசுதல் திருச்சடங்கு



கொழும்பு புனித லூசியாஸ் பேராலயப் பங்கைச் சேர்ந்த 83. மாணவ, மாணவிகளுக்கு உறுதிப்பூசுதல் திருவருட்சா தனம் கடந்த 14.05.2022 அன்று வழங்கப்பட்டது. இவ் உறுதிப்பூசுதல் திருச்சடங்கை கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் பேரருட்திரு கலாநிதி அன்ரன் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் நிறைவேற்றி வைத்தார்.

உறுதிப்பூசுதல் பெற்ற பிள்ளைகளை கொழும்புப் பேராலய உதவிப்பங்குத்தந்தை ஸ்டீபன் சிங்கராயரும், மறையாசிரி யர்களும் ஆன்மீக ரீதியில் தயார்ப்படுத்தியிருந்தனர்..

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2022ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.